விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 237 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 28 ஞாயிற்றுக்கிழமை (13.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை


T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# ரணிலுடன் தமிழ்க் கட்சிகள் கைகோர்க்க வேண்டும்

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன அழைப்பு

(கொழும்பு)

**13ஆவது திருத்தச் சட்டமூலம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்க் கட்சிகள் கைகோர்த்துச் செயற்பட முன்வர வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன அழைப்பு விடுத்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இது விவாதம் செய்யும் காலம் அல்ல. நாட்டுக்காக - மக்களுக்காக கட்சி வேறுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்படும் காலமே இது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான தனது 19



## 13 தொடர்பில் கோட்டாபய மௌனத்தை கலைக்க வேண்டும்

15ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணத்தில்

## தவறிவிழுந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் இருந்து தவறிவிழுந்து படுகாயமடைந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம் அபூபக்கர் வீதியைச் சேர்ந்த கனகசபை 19

திருமணம் செய்வதாக

## சிறுமியை அழைத்து வந்த இளைஞன் பொலிஸாரால் கைது

(முல்லைத்தீவு)

திருமணம் செய்வதாக கூறி 15 வயது சிறுமியை அழைத்து வந்த கள்ளப்பாட்டு இளைஞன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

விசுவமடுவினை சேர்ந்த 15 வயது சிறுமியைக் காணவில்லை என கடந்த மாதம் பெற்றோரால் விசுவமடு பொலிஸில் 19

## இராவண மன்னன் தொடர்பில் முழுமையான ஆய்வு வேண்டும்

### பாராளுமன்றில் தனிநபர் பிரேரணை

(கொழும்பு)

இராவண மன்னன் தொடர்பாக ஆராய்ந்து முழுமையான வரலாற்று தகவல்களை வெளிக்கொண்டு வர வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண நேற்று பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையை சமர்ப்பித்தார்.

இராவணன் தொடர்பில் பல்வேறு 19

## யாழ்.கல்வியங்காட்டில் குடும்பஸ்தர் அடித்துக் கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வியங்காட்டில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இதில் கல்வியங்காடு விளையாட்டரங்கு வீதியை சேர்ந்த கணபதிப்பிள்ளை மகேந்திரன் (வயது-54) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்த குடும் 19



## ஐந்து நாள் காய்ச்சல் குடும்பஸ்தர் மரணம்

### கோண்டாவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஐந்து நாள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சில மணி நேரத்தில் உயிரிழந்துள்ளார்.

இதில் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் 19

கோப்பாய் தெற்கில்

## மோ.சைக்கிள் விபத்து; குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீதியை கடக்க முற்பட்ட குடும்பப் பெண் ஒருவர் மோட்டார் சைக்கிள் மோதியதில் உயிரிழந்துள்ளார்.

இதில் கோப்பாய் தெற்கை சேர்ந்த நாகராசா இராசபூபதி (வயது-68) என்பவரே உயிரிழந்தவராவார்.

பருத்தித்துறை - 19

எதிர்பார்த்த இலக்குகளை அடையாததால்

## சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைக்காமல் போகும் அபாயம்

(கொழும்பு)

இலங்கைக்கு அடுத்த மாதம் கிடைக்கவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை கடன் திட்டமிட்டபடி உரிய நேரத்திற்கு கிடைக்காமல் போக வாய்ப்புகள் உள்ளது என வடமேற்குப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் அமிந்த மெத்சில பெரேராவே தெரிவித்துள்ளார். 04

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகளுடன்

1ம் ஆண்டு

# நினைவஞ்சலி



மண்ணக வாழ்வில் 01 . 10 . 1977

விண்ணக வாழ்வில் 13 . 08 . 2022

அமரர் திருமதி

## லக்ஷலா சகாயசீலன் (லக்ஷி)

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
மண்ணிலிருந்து நீ மறைந்தாலும்
மறக்காது உன் நாட்கள்...
பொன்னான உன் சிரிப்பும்
பூரித்த உன் முகமும்
தினமும் எம் முன்னே தோன்றுதம்மா
நீண்ட நெடுந்துயரில் நாமிங்கு தவிக்கின்றோம்
ஆறுதல் தர வாராயோ அம்மா எம் வாசல் தேடி...

எங்கள் உயிர் உள்ளவரை
உன் நினைவுகளுடன் வாழும்...

45, முதலியார் ஒழுங்கை,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம். (16693)

கணவன், பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்

## மனநல சிகிச்சை பெறுபவர்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

பொருளாதார பிரச்சினையினால் ஏற்பட்டுள்ள மனநல பிரச்சினைக்கு சிகிச்சை பெறுவதற்காக,

மனநலம் பாதிப்பு தொடர்பான வைத்தியர்களை சந்திக்க வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக,

காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் விசேட மனநல வைத்திய நிபுணர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.

சிகிச்சைக்காக வரும் அவ்வாறான நோயாளர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளார். (ம-7)


A/L Classes
Biology, Chemistry
English/Tamil Medium
Conducted by Lecturer (16700)
077 807 5566

பிடவை கடைக்கு பெண் விற்பனையாளர்கள் தேவை
யாழ் நகரில் இயங்கும் பிடவை கடைக்கு அனுபவம் உள்ள அல்லது தொழில் பழக ஆர்வம் உள்ள பெண் விற்பனையாளர்கள் தேவை.
சென்னை பெசன் வேல்ட்
63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (16705)

நாகபூஷணி திருமண சேவை
வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், அரச உத்தியோகத்தர், வங்கியாளர், ஆசிரியர்கள், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்களை உடன் பெற்றுக்கொள்ளலாம். (C-7051)
264, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
021 222 9306, 071 999 9306,
077 138 7596


# மரண அறிவித்தல்



பிறப்பு 18 - 07 - 1944

இறப்பு 08 - 08 - 2023

## கந்தசாமி அன்னம்மா

அல்வாய் கிழக்கு தாமன்தோட்டத்தை பிறப்பிடமாகவும் கப்பூது மற்றும் அச்சுவேலி தோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - லக்ஷிமி தம்பதியரின் அன்பு மருமகளும் கந்தசாமியின் (தோரை) அன்பு மனைவியும் சிறிதரன் (சிறி - ஜேர்மனி), ராஜேஸ்வரி (ரதி - சுவிஸ்), மங்களேஸ்வரி (றஞ்சி - ஜேர்மனி), சாரதா (பிரான்ஸ்), சிவகுமார் (சிவா - பெல்ஷியம்), வளர்மதி (சோபா - சுவிஸ்) மற்றும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி (கிளி), சிவானந்தம் (சிவா), சிவநேசன் (அப்பன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாந்தரூபி, மோகன், குமார், விக்டர், ஜெயா, காலஞ்சென்ற பற்குணநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் லவன், கிரன், ஆதுசியா, ஸ்ருதி, பிரியங்கா, சிவநேசன், சாருஜா, ஸ்ருதி, அஞ்சலி, சயனன், நித்திஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2023) ஞாயிற்றுக் கிழமை 7 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தோப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்

(16683)

# மரண அறிவித்தல்



பிறப்பு 15 - 07 - 1967

இறப்பு 08 - 08 - 2023

## சுந்தரலிங்கம் தங்கேஸ்வரன்

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் சுவிசை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் தங்கேஸ்வரன் அவர்கள் 08.08.2023 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சந்திராதேவி தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - மனோன்மணி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் சுமதியின்(சுவிஸ்) பாசமிகு கணவரும் தனுஷன்(சுவிஸ்), சுதர்ஷன்(சுவிஸ்), சாருஷன்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயாநிதி(பிரான்ஸ்), சிவநிதி(கனடா), காலஞ்சென்ற சுகந்தினி ஆகியோரின் சகோதரனும் சுதிதரன்(பிரான்ஸ்), சுதாகரன்(கனடா), சுதாரணி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் சிவநாதன் சித்திராதேவி ஆகியோரின் பெறாமகனும் மகாதேவன் சற்குணதேவி ஆகியோரின் மருமகனும் மனோஜெயந்தன்(பிரான்ஸ்), காலஞ்சென்ற ஐங்கரன்(கனடா), சிவனேஷன்(நோர்வே), மனோரஞ்சன்(ஜேர்மனி), சிவசோதி(பிரான்ஸ்), சர்மிளா, மஞ்சுளா, ஜனனி(ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் மதி (நோர்வே), உமா(நோர்வே), தங்கம்(சுவிஸ்), ஜெசிந்தா(பிரான்ஸ்), சாமினி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் குணசிங்கம்(நோர்வே), திலகன் (நோர்வே), குமார்(சுவிஸ்) ஆகியோரின் சகலனும் கிஷாந்(பிரான்ஸ்), கிருஷ்ணி (பிரான்ஸ்), கிதுஷன்(பிரான்ஸ்), அபிஷன்(கனடா) ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் இன்று 13.08.2023 ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

தகவல் - குடும்பத்தினர்
076 755 5008

(16687)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிக் கடவுச் சீட்டுடன் இரு இந்தியர்கள் கைது

(கொழும்பு)

போலியாக தயாரிக்கப்பட்ட சீன நாட்டின் கடவுச்சீட்டை பயன்படுத்தி நெதர்லாந்து செல்ல முயற்சித்த இரண்டு இந்திய பிரஜைகளை நேற்று சனிக்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் வெளியேறும் முனையத்தில் வைத்து விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைதான இருவரும் திபெத் வும்சாவளியைச் சேர்ந்தவர்கள் ஆவர். 43 வயதான ஆண் இந்தியாவின் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர் எனவும், அவருடன் கைது செய்யப்பட்டுள்ள 39 வயதான பெண் உத்தரகாண்ட் மாநிலத்தைச் சேர்ந்தவர் எனவும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானத்தில் ஏறுவதற்கான அட்டையை பெறுவதற்காக அல் ஜசீரா விமான சேவையின் கருமபீடத்திற்கு சென்றுள்ள நிலையில், அவர்களின் கடவுச்சீட்டை ஆராய்ந்த அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டதையடுத்து, இவருவரையும் குடிவரவு மற்றும் குடியகல்வு பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். (4)

# கொழும்பில் இளைஞன் சூட்டுப் படுகொலை

(கொழும்பு)

நீர்கொழும்பு - லெல்லம பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த துப்பாக்கி சூட்டு சம்பவம் நேற்று காலை இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் நபரொருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த நபரை நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பிடபன பிரதேசத்தில் வசிக்கும் 25 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

# ஆசிரியர் கலாசாலை பரீட்சைகள் 14 முதல் 19 வரை

(கொழும்பு)

ஆசிரியர் கலாசாலை இறுதிப் பரீட்சை மற்றும் பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான பரீட்சைகள் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி, ஆசிரியர் கலாசாலை பரீட்சைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பரீட்சை விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய www.doendts.lk என்ற இணையத்தளத்துக்கு பிரவேசிப்பதன் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

# சீனாவின் போர்க்கப்பல்; இந்தியா கடும் கண்காணிப்பு

(கொழும்பு)

**கொழும்பு துறைமுகத்தில் சீனாவின் போர்க் கப்பல் தரித்து நிற்பதை உன்னிப்பாக அவதானிப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.**



இந்தியாவின் பாதுகாப்பு நலன்களிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்த விடயத்தையும் இந்தியா உன்னிப்பாக அவதானிக்கின்றது என இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அரிண்டம் பக்சி தெரிவித்துள்ளார்.

இந்தியா தனது பாதுகாப்பு நலன்களை பாதுகாப்பதற்கான அனைத்து அவசியமான நடவடிக்கைகளையும் எடுக்கும் எனவும்அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் உள்ளது யுத்தக்கப்பலா இல்லையா என்பது எனக்கு தெரியாது.எனினும் வெளியான தகவல்களை பர்வையிட்டதன் அடிப்படையில் இந்திய அரசாங்கம் தனது பாதுகாப்பு நலன்களில் தாக்கம் செலுத்தும் எந்த விடயத்தையும் உன்னிப்பாக அவதானித்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றது என்பதை வலியுறுத்துகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார். (4)

# துருக்கியில் பேருந்து விபத்து 27 இலங்கையர்கள் காயம்!



(கொழும்பு)

துருக்கியில், இஸ்தான்புல் விமான நிலையத்தில் பணிபுரியும் இலங்கையர்களை ஏற்றிச் சென்ற பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்து இடம்பெற்ற போது பேருந்தில் 39 இலங்கையர்கள் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது

சுரங்கப்பாதையில் பயணித்த பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டின் கீழ் கிலிஹி பிரதான வீதியில் இருந்து திடீரென குதித்து சுமார் 6 மீற்றர் பாறையில் வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக அப்போது துருக்கி சாரதியுடன் 40 இலங்கையர்கள் பேருந்தில் இருந்ததாகவும் அவர்களில் 27 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, விபத்தில் காயமடைந்த இலங்கையர்கள் தொடர்பில் விசாரிப்பதற்காக துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் பிரதிநிதி ஒருவரை இஸ்தான்புல் நகருக்கு அனுப்பவுள்ளதாக துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. (4)

# விகாரை கட்டத் தடை; வீதிக்கு இறங்கிய பிக்குகள்



(கொழும்பு)

விகாரை கட்டுவதை தடுக்க வேண்டாம் என திருகோணமலை- நிலாவெளி பிரதான வீதியை மறித்து பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை-இலுப்பைக்குளம் கிராமத்தில் புத்தசாசன அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்ட விகாரையின் நிர்மாணப்பணி நிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று காலை 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை இப்போராட்டம் நடத்தப்பட்டது.

சிங்கள,தமிழ், முஸ்லிம் சகோதரத்துவத்தை குழப்புகின்ற ஆளுநரை அனுப்புவோம். வரலாற்றுச் சான்றுகளை கிளறுகின்ற R.சம்பந்தன். புத்தசாசன அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்ட விகாரையின் நிர்மாணப் பணியை நிறுத்த சம்பந்தன் யார்? போன்ற பதாகைகளை ஏந்தியவாறு பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (4)

ஈஸ்டர் தாக்குதல்

# 24 சந்தேகநபர்களுக்கு எதிராக 23,270 குற்றச்சாட்டுகள்

(கொழும்பு)

நௌபர் மௌலவி உட்பட 24 பேருக்கு எதிராக ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதலுக்கு சதி மற்றும் உதவிய குற்றச்சாட்டின் கீழ் 23,270 குற்றச்சாட்டுகளை சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு தொடர்பான பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மீதான விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் நிறைவடைந்தது.

மூன்று நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்தார்.

நௌபர் மௌலவி, சஜித் மௌலவி, மொஹமட் மில்ஹான், சாதிக் அப்துல்லா, மொஹமட் சனஸ்தீன் மற்றும் மொஹமட் ரிஸ்வான் உட்பட 24 பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளில் கொலை சதி, உதவி செய்தல், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை சேகரித்தல் மற்றும் கொலை முயற்சி ஆகியவை அடங்கும்.

வழக்கின் அடுத்தகட்ட விசாரணை ஒக்டோபர் 10 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்ட அதே நேரம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் பி.அம்பாவிலவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லங்கா பிறீமியர் லீக் தொடர் தம்புள்ளை அணி வெற்றி




லங்கா பிறீமியர் லீக் இருபது - 20 தொடரின் 14 ஆவது லீக் போட்டியில், தம்புள்ளை அவுரா அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில், காலி டைடன்ஸ் அணியும் தம்புள்ளை அவுரா அணியும் பலபரீட்சை நடத்துகின்றன.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்றுள்ள அணி, தம்புள்ளை அவுரா அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்துள்ளது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய காலி டைடன்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 133 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதன் போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக தசுன் சானக 36 ஓட்டங்களையும் சாட் பவ்ஸ் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தம்புள்ளை அவுரா அணியின் பந்துவீச்சில் துஸான் ஹேமந்த 2 விக்கெட்டுகளையும் பினுர பெனார்டோ, ஹசன் அலி, தனஞ்சய டி சில்வா, ஹெய்டன் கெர் மற்றும் நூர் அஹமட், ஆகியோர் தலா 1 விக்கெட் டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 134 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தம்புள்ளை அவுரா அணி, 17.4 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

இதனால், தம்புள்ளை அவுரா அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அவிஷ்க பெணார்டோ ஆட்டமிழக்காது 70 ஓட்டங்களையும் சதீர சமர விக்ரம 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

காலி டைடன்ஸ் அணியின் பந்துவீச்சில் லஹிரு குமார 2 விக்கெட்டுகளையும் சகிப் அல் ஹசன் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 49 பந்துகளில் தலா 3 சிக்ஸர்கள் மற்றும் பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 70 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட அவிஷ்க பெணார்டோ தெரிவு செய்யப்பட்டார். (4)

# காலிறுதிக்குள் நுழைந்தது ஸ்பெயின், சுவீடன் அணிகள்

2023 ஆம் ஆண்டுக் கான மகளிருக்கான உலகக் கிண்ண கால்பந்து தொடர் விறுவிறுப்பாக இடம்பெற்றுவருகின்றது.

அதன்படி நேற்று முன் தினம் இரண்டு காலிறுதி போட்டிகள் இடம்பெற்றன.

அதில் ஸ்பெயின் மற்றும் நெதர்லாந்து அணிகளும் ஜப்பான் மற்றும் சுவீடன் அணிகளும் பலப் பரீட்சை நடத்தின.

முதலில் இடம்பெற்ற காலிறுதி போட்டியில் நெதர்லாந்தை 2-1 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தி ஸ்பெயின் அணி வெற்றி பெற்றுள்ளது.

81ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி ஸ்பெயின் வீராங்கனை மரியோனா, கால்டென்டே ஒரு கோலை புகுத்தினார்.

இதனை தொடர்ந்து 91ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து அணியின் வீராங்கனை ஸ்டெபானி கிராக்ட் ஒரு கோலை புகுத்த இரு அணிகளும் 1:1 என சம நிலை பெற்றது.

வழங்கப்பட்ட மேலதிக நேரத்தை பயன்படுத்திக் கொண்டு 111 ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீராங்கனை சல்மா செலஸ்டே ஒரு கோலை புகுத்த ஸ்பெயின் அணியின் வெற்றி உறுதியானது.

இதேவேளை மற்றுமொரு காலிறுதி போட்டியில் 2-1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் ஜப்பானை வீழ்த்தி சுவீடன் அணி வெற்றி பெற்றுள்ளது.

## சர்வதேச...

கடந்த மே மாத நிலை வரத்திற்கமைய, சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்த்த இலக்குகளில் 39 சதவீதம் மாத்திரமே எட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஜூன் மாதத்தில் 55 சதவீதம் என்ற இலக்கில் சுமார் 33 சதவீதம் நிறைவடைந்துள்ளது. இந்த 33 சதவீதத்திற்குள் மோசடி மற்றும் ஊழல் குறைப்புச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் சுதந்திரச் சட்டம் ஆகியவற்றின் நடைமுறை ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளபோதிலும், அவை ஜூன் மாதத்தில் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் ஞானமூர்த்தி
## (குமார்)



பிறப்பு 20.04.1961 — இறப்பு 10.08.2023

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ஞானமூர்த்தி அவர்கள் கடந்த (10.08.2023) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் சரஸ்வதி (கனடா) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் சீதாலெட்சுமி தம்பதியரின் மருமகனும் தயாநிதியின் அன்புக் கணவரும் அங்கயன், இந்துயன் ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்னேஸ்வரமூர்த்தி (கனடா), மங்களேஸ்வரி (இத்தாலி), கணேசமூர்த்தி (லண்டன்), தவனேஸ்வரி (கனடா), ஞானேஸ்வரி (கனடா), சுந்தரமூர்த்தி (கனடா), சந்திரமூர்த்தி (சுவிஸ்), சிவனேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2023) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வதிரி வீதி,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

(C-7060)

தகவல் -
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத்தைக் குழப்ப ஜனாதிபதி ரணில் முயற்சி

## சாணக்கியன் எம்.பி



(கொழும்பு)

பாராளுமன்ற சிறப்புரிமையை ஆட்சியாளர்கள் தங்களுக்கு தேவையான முறையில் பயன்படுத்துகிறார்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

பாராளுமன்றத்தைக் கூட அரசாங்கம் தமது தேவைக்காக பயன்படுத்துகின்றதா என்ற சந்தேகம் எமக்கு தற்போது எழுகின்றது. பாராளுமன்ற சிறப்புரிமையை கூட இன்று ஆட்சியாளர்கள் தமது தேவைகளுக்காக பயன்படுத்துகின்றனர்.

அண்மைக்காலச் செயற்பாடுகளை அவதானித்தால் நாட்டின் நீதிமன்றங்களுக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் குழப்பநிலையினை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி முயற்சிக்கின்றார் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

மேலும், தேர்தலுக்கான நிதியினை விடுவிக்காமல் தனது நிறைவேற்று அதிகாரத்தினைப் பயன்படுத்தித் தடுப்பது போன்ற விடயங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை மீறும் செயலாகும்.

எனவே, இந்த விடயத்தில் ஜனாதிபதி தான் விரும்புகின்ற நேரத்தில் பாராளுமன்றத்தில் இருக்கின்ற தனது கையாட்களை வைத்து சிறப்புரிமைகளை எழுப்பி இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்துகின்றார்.

எனவே, எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் தொடர்பாக நாம் அவதானத்துடன் செயற்பட வேண்டும். அத்துடன் இலங்கையில் வரலாற்றினை முழுமையான ஆய்வுக்குட்படுத்துவதன் மூலம் பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகளை தீர்த்துக் கொள்ள முடியும்.

ஆனால், குறித்த ஆய்வுகள் முன்னெடுக்கப்படும் போது அது அரசியல் இலாபங்களுக்காகவோ அல்லது அரசியல் தலையீடுகளுடனோ முன்னெடுக்கப்படக் கூடாது எனத் தெரிவித்தார். (4)

# இலங்கை கிரிக்கெட் தொடர்பில் 24 ஆம் திகதி விவாதம்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் தொடர்பான பாராளுமன்ற விவாதங்கள் மற்றும் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கட்சித் தலைவர்கள் தீர்மானம் எடுத்துள்ளனர்.

இருப்பினும் ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி இலங்கை கிரிக்கெட் தொடர்பில் ஒருநாள் விவாதம் நடத்தப்படும் என சபைத் தலைவர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதன்படி சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் வாரத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதே இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக அமைச்சர் பிரேமஜயந்த தெரிவித்தார். (4)

# போராட்டத்தில் காலத்தை கடத்தும் பல்கலைக்கழக மாணவர்கள்

## கல்வி அமைச்சர் சுசில்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களிலிருந்து கல்வி கற்று பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் 100 வீதமான மாணவர்கள் தொழில் வாய்ப்புகளை பெற முடியும்.

இருப்பினும் சில மாணவர்கள் கல்வி கற்பதற்கும் புதிய அறிவினை பெற்றுக் கொள்வதற்கும் இருக்கும் காலத்தை போராட்டத்தில் ஈடுபட்டு கழிக்கின்றனர் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக மாணவர்களினால் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

உயர்தரத்தில் சித்தி பெறும் அனைவரும் பல்கலைக்கழகத்திற்கு செல்ல முடியாது அல்லவா? நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பல்கலைக்கழங்களிலும் இருந்து 40 ஆயிரம் மாணவர்களை மாத்திரமே உள்ளீர்க்க முடியும். இருப்பினும் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேர் சித்தி அடைகின்றனர். அவர்களுக்கு செல்ல இடம் ஒன்று தேவை யாகும். சிலர் பணத்தை செலுத்தி செல்கிறார்கள். இதில் மற்றவர்களுக்கு உள்ள பிரச்சினை என்ன? இந்த பல்கலைக் கழகங்களிலிருந்து படித்து பட்டப் படிப்பை முடித்து வெளியேறும் 100 வீதமான மாணவர்கள் தொழில் வாய்ப்புகளை பெற முடியும். மற்றைய பல்கலைக்கழகங்களில் உள்ள மாணவர்கள் கல்வி கற்பதற்கும் புதிய அறிவினை பெற்றுக் கொள்வதற்கு இருக்கும் காலத்தினை போராட்டத்தில் ஈடுபட்டு கழிக்கின்றனர் எனத் தெரிவித்தார். (4)


**விற்பனைக்கு**

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய "Yamaha Mate 90" மற்றும் Honda "Super Cub 90"(2023) மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு.

(16695)

தொடர்புகளுக்கு:-
077 773 0567

**வீடு வாடகைக்கு தேவை**

கோண்டாவில், கொக்குவில் பகுதிகளில் வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.
075 260 4360
(தரகர்கள் தேவையில்லை)

**மணமகள் தேவை**

1996. யாழிந்து. ஆயிலியம். Engineer, U.S.A (பூர்வீகம்: காரைநகர்).மணமகன் பதிவு #8722 தரகர் கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. WWW.EQ Marriage Service.com இணையவழி திருமண சேவை பம்பலப்பிட்டி கொழும்பு 04
அழையுங்கள் 076 664 9401

**மணமகள் தேவை**

1988. யாழிந்து.சதயம்.Electrical Engineer, Australia (பூர்வீகம்: காரைநகர்). மணமகன் பதிவு #7108 தரகர் கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. WWW.EQ Marriage Service.com இணையவழி திருமண சேவை பம்பலப்பிட்டி. கொழும்பு 04
அழையுங்கள் 076 664 9401

**மணமகன் தேவை**

1990. யாழ்.கிறிஸ்தவம்.பூசம்.Lawyer. வல்வெட்டித்துறை. மணமகள் பதிவு #6019 தரகர் கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. WWW.EQ Marriage Service.com இணையவழி திருமண சேவை பம்பலப்பிட்டி. கொழும்பு 04
அழையுங்கள் 076 664 9401


# இராசிபலன்

13.08.2023
ஆடி 28, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி முற்பகல் 10.28 மணிவரை
திருவாதிரை முற்பகல் 11.16மணிவரை

சுபநேரம் -9.05-10.35 மணிவரை
இராகுகாலம்-4.35-06.05 மணிவரை
பிரதோஷ விரதம்

சந்திராஷ்டமம்- கேட்டை.

வளவன்

**மேஷம்** — எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**கடகம்** — காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், தேவையற்ற மனக்குழப்பங்கள் ஏற்படலாம், சுபவிரயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.

**துலாம்** — புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**மகரம்** — பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெற வாய்ப்புண்டு, காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** — வாக்கு மேன்மையுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்** — மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடி கொள்ளும், மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — உடல் நலனில் கவனம் தேவை, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், கௌரவக் குறைவான சில சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** — பொது காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, உறவினர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள் .

**மிதுனம்** — பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கன்னி** — செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பிறர் உதவி உண்டு,தூர தேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**மீனம்** — பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

எதிரிகள் இல்லாத மனிதன் எவருமே இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க கைகோர்ப்போம்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(கொழும்பு)

மலையகத் தமிழ் மக்கள் மீது அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட ஒடுக்கு முறைக்கு எதிராக நாங்கள் என்றும் தொடர்ந்து போராடுவோம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எங்கள் மலையக தமிழ் மக்களின் 200 வருட வரலாற்றினை நினைவு கூறும் வகையில் இந்த வருடம் முழுவதும் பல்வேறு தரப்பினரால் பல நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு வருகிறது. 200 வருட நிகழ்வுகள் வெறுமனே நிகழ்வுகளாக முடிந்துவிடாமல் மலையக தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தினை அனைத்துத் தரப்பினரிடமும் வலியுறுத்துகிறோம்.

1980களின் பின் அவர்களுக்கான குடியுரிமை படிப்படியாக வழங்கப்பட்டதன் பின்னரே இச்சமூகத்தில் சில மாற்றங்கள் உருவாகின.

தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் எத்தனையோ வறுமை, சமூக நெருக்கடி, துன்பங்களின் மத்தியிலும் கல்வியில் முன்னிலை வகிக்கின்றனர்.

அதற்கு சான்றாக எமது பல்கலைக்கழகத்தில் மலையக தமிழ் மாணவர்கள் அனைத்துத் துறைகளிலும் மிளிர்ந்து வருகின்றார்கள். படிப்படியாக அவர்கள் தமது சுய முயற்சியிலேயே முன்னேறி வந்துள்ளார்கள்.

ஆனால் தேசிய ரீதியான வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது இன்றுவரை அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. கடந்த 200 வருடத்தில் அடைந்தவை சில. அடைய வேண்டியவை பல என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

இருப்பினும் 200 வருட வரலாற்றை நினைவு கூரும் இந்த வருடத்தில் எம் மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சர்வதேசத்திலும் அரசியல் மற்றும் சிவில் சமூக மட்டத்திலும் பேசுபொருளாக உள்ளது.

அந்த முன்னேற்றத்தை மலையக தமிழ் மக்களின் நிரந்தர தீர்வுக்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை பற்றிப் பேசும்போது எங்கள் மலையகத் தமிழ் மக்களின் தேசிய அடையாள மற்றும் சுயநிர்ணயம் பற்றியும் கூடுதல் கவனம் செலுத்தி அழுத்தம் கொடுக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-104)

# கீரிமலையில் ஆடி அமாவாசை ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

கீரிமலையில் நாளைமறுதினம் 15ஆம் திகதி நடைபெறவுள்ள ஆடி அமாவாசை உற்சவத்தினை முன்னிட்டு பல சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெல்லிப்பளை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல ஆயிரம் பொது மக்கள் வருகை தரக் கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் பொது மக்களின் நன்மை கருதி அவர்களிற்கு தேவையான சகல வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலை5.00மணிக்குமாவைக் கந்தன் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு காலை 6 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தப் பிரதேசத்திற்கு சென்றடைவார். அன்றைய தினம் தமது பிதிர் கடன்களை நிறைவேற்றுவதற்குரிய சகல வசதிகளும் பொது மக்களின் நன்மை கருதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிதிர் கிரியைகளில் ஈடுபடவுள்ள மதகுருமார்கள் அனைவரும் தமது பதிவினை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் சமய சமூக ஒழுக்கத்தினை முறையாக பின்பற்றுவதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கீரிமலை புனித பிரதேசத்தை சுற்றியுள்ள பிரதான வீதிகளில் அன்றைய தினம் வீதித் தடைகள் அமைக்கப்பட்டு போக்குவரத்து பொலிசார் கடமையில் ஈடுபடுவார்கள். போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகள் மட்டும் வீதித் தடைகளை கடந்து சென்று பொது மக்களினை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் அனுமதிக்கப்படும். ஏனைய அனைத்து வாகனங்களும் வாகன தரிப்பிடங்களில் நிறுத்த வேண்டும்.

இரு சக்கர வாகனங்களுக்கும் ஏனைய வாகனங்களுக்கும் தனித்தனியாக வாகன தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. கீரிமலை புனித பிரதேசத்திற்கு தாது பிதிர் கடன்களை நிறைவேற்ற வரும் பொது மக்கள் அனைவரும் கலாசார உடையணிந்து வருவதுடன் பாதணிகளுடன் வருகை தருவதனை முற்றாக தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அதிக வெப்பமான காலநிலை நிலவும் தற்கால சூழலில் பொது மக்களிற்கு தேவையான குடிநீர் வழங்குவதற்குரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் முதலுதவி மற்றும் தேவையான மருத்துவ சேவை வழங்குவதற்கும் பொது மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கீரிமலை புனித பிரதேசத்தினை சுற்றியுள்ள எந்தவொரு பிரதேசத்திலும் போதை சார்ந்த எந்தவொரு பொருளினை விற்பனை செய்வதற்கும் அதனை பயன்படுத்துவதற்கும் முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் சிறுவர்கள் வியாபார மற்றும் யாசக நடவடிக்கையில் ஈடுபடுத்துவதும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

பொது மக்களிற்கு இடையூறு மற்றும் பொது அமைதிக்கு பாதகம் ஏற்படுத்தும் எந்தவொரு சம்பவங்களுக்கும் அனுமதி கிடையாது என்பதுடன் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (4)

# குவியம் விருது வழங்கும் விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் சினிமாக் கலைஞர்களுக்கான மாபெரும் விருது விழாவான "குவியம் விருதுகள் 2023" நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணியளவில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் கலைஞர்களுக்கான செங்கம்பள வரவேற்பைத் தொடர்ந்து விருது வழங்கும் நிகழ்வு ஆரம்பமாகி; பல கலை நிகழ்ச்சிகளும் அரங்கேற காத்திருக்கின்றன.

விருது விழாவில் முழு நீள திரைப்படங்கள், ஆவணப்படங்கள், குறும்படங்கள் மற்றும் காணொளிப் பாடல்களுக்காக விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இந்த விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அதற்கமைய கிடைக்கப் பெற்ற நூற்றுக்கணக்கான படைப்புக்களில் இருந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர் விபரங்கள் விழா மேடையில் அறிவிக்கப்படவுள்ளதுடன் விருதுகளும் வழங்கி வைக்கப்படவுள்ளன.

தவிர, இரண்டாவது தடவையாக இடம்பெறவுள்ள குவியம் விருதுகள் நிகழ்வில் பல சிறப்பு விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் ஈழத்தமிழ் சினிமாவுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த ஒப்பற்ற கலைஞன் மறைந்த திரைப்பட இயக்குநர் நவரட்ணம் கேசவராஜாவுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. அமரர் சார்பில் அவரது குடும்பத்தார் அதனைப் பெற்றுக் கொள்வார்கள். (4-33)

# உருத்திரா இசையை அரங்கு

(யாழ்ப்பாணம்)

"மாலை பருந்த கானமய" இசைக்கழகத்தின் ஏற்பாட்டில் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலய தேர்திருவிழாவை முன்னிட்டு நாளை 14 ஆம் திகதி உருத்திரா இசை அரங்கு இடம்பெறவுள்ளது என இசைக் கூட தலைவர் அறிவித்துள்ளார். (4)

# மலையக எழுச்சி நடைபவனி மாத்தளையில் நிறைவடைந்தது


(கொழும்பு)

மலையக மக்களின் உரிமைகளை வலியுறுத்தும் மலையக எழுச்சி பேரணி நேற்று சனிக்கிழமை மாத்தளையில் வெற்றிகரமாக நிறைவுபெற்றுள்ளது.

தலைமன்னார் முதல் மாத்தளை வரையான மலையக எழுச்சிப் பயணத்தின் நிறைவு நாளான நேற்று சனிக்கிழமை மலையக மக்கள் கூட்டிணைவிலான பேரணி மாத்தளையை அடைந்தது.

மலையகம் 200ஐ முன்னிட்டு கடந்த 16 நாட்களாக இடம்பெற்றுவந்த மலையக எழுச்சி நடைபவனி இன்று மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தை அடைந்ததோடு நிறைவுபெற்றது.

அதனை தொடர்ந்து, பயணத்தின் இலக்கு, மலையக மக்களின் கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையிலான நடைபவனி நிறைவு நிகழ்வு



மாத்தளை முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் ஆரம்பமாகியுள்ளது.

"வேர்களை மீட்டு உரிமை வென்றிட" என்கிற தொனிப் பொருளில் இந்த நடைபவனி நிகழ்வு கடந்த ஜூலை 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை தலைமன்னாரில் ஆரம்பமானது.

தலைமன்னார் புனித லோரன்ஸ் தேவாலயத்தில் கலை நிகழ்வுகள் மற்றும் நினைவுத்தூபி அஞ்சலி இடம்பெற்றதோடு, மறுநாள் 29ஆம் திகதி சனிக்கிழமை தேவாலய வளாகத்தில் நடைபவனி புறப்பட தொடங்கியது.

இந்த 16 நாள் நடைபவனி நிகழ்வில் பல பிரதேசங்களின் வழியாக மலையக மக்கள் பேரணியினர் பயணித்தனர். அவர்கள் செல்கிற இடங்களில் அந்தந்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் மலையக மக்களின் நடைபவனிக்கும் அவர்களது கோரிக்கைகளுக்கும் முழு ஆதரவினை வழங்கியிருந்தனர். (4)

# மாயமான மீனவரை மீட்டுத்தர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த 4 ஆம்திகதி அன்று கடற்றொழிலுக்கென சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் அவரை கண்டுபிடித்து தருவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உதவுமாறும் காணாமல்போனவரின் தாயார் கோரிக்கை விடுத்துள்ளார். யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நடாத்திய ஊடகசந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 4 ஆம் திகதி கடலுக்கென சென்றவர் மீண்டும் வீடு திரும்பவில்லை என்றும். அவரை கடத்தியதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில் கடத்தியதாக சந்தேகிக்கப்படும் ஒருவரை நாகர்கோவில் பகுதியில் மடக்கிப் பிடித்த ஊரவர்கள் கடத்தல் தொடர்பில் ஒப்புக்கொண்ட நிலையில் அவரை பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும், தெரிவித்துள்ள தாயார் மேலும் அவருடன் சென்ற ஒருவர் கஞ்சா கடத்தல் தொடர்பில் கைதாகி இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தனது மகன் வீடு திரும்பாத நிலையில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும், பொலிஸாரும் அவரை தேடி வருவதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ள தாயார், அவரை மீட்டுத் தருமாறும், கோரிக்கை விடுத்துள்ளார். (4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 410

Viber 076 636 3378



# அரசினால் பிரச்சினை!

"அரசமரம் நிற்கும் இடமெல்லாம் பௌத்தத் திற்கு உரித்தானது என்ற குறுகிய எண்ணத்தை சம்பந்தப்பட்டவர்கள் நிறுத்த வேண்டும். இல்லை யேல் அரசினால் பிரச்சினை வரும் என்று அப்பு கூறிய விடயம் பலித்துவிடும். அது பல உயிர் களை பலி எடுத்து விடும்."

இது நாற்பது வருடங் களுக்கு முற்பட்ட கதை. நான் சிறுவன். ஆட்டிற்கு குழை வெட்டுவதற்காக தோட்டப் பக்கம் சென்று குழை வெட் டிக் கொண்டு வரும்போது சிறிய அரச மரம் ஒன்று முளைத்திருப்பதைக் கண் டேன்.

அதை எமது வளவில் நட்டால் நல்ல நிழல் தரும் எனும் எண்ணத்தில் அதைப் பிடுங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தேன்.

அதைக் கண்ட எனது அப்பு என்ன இது கையில் என்றார்.

நான் அரசமரம் அப்பு. வளவுக்குள்ள நட்டா நல்லா வளரும் நல்ல நிழல் தரும் என்று கூறினேன். அடுத்த கணமே எனது அப்பு ஒரு வாசகத்தைக் கூறினார். அது அப்போது எனக்குப் புரிய வில்லை. நாற்பது வருடங்கள் கடந்தபின் இப்போது புரி கிறது.

அதாவது "அரசால் பிரச் சினை வரும்" என் பதே எனது அப்புவின் அந்த வசனம்.

அன்று அவர் எதை நினை த்து ஏன் அவ்வாறு கூறி னாரோ தெரியவில்லை.

இன்று அரச மரத்தினால் தமிழினத்தின் இருப்புக்கே பிரச்சினை எழுந்திருக்கிறது.

அரச மரம் ஈழத் தமிழி னத்தின் வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்தது. அந்த அரச மரத்துக்கு இப்போது பேரினவாதிகளால் மிகப் பெரும் அச் சுறுத்தல் ஏற்ப ட்டிருக்கிறது எனின் அரச இயந்திரங்களின் ஆக்கிர மிப்பை எவ்வாறு விபரித்து விட முடியும்.

அரச மரத்தை கண்ட இடமெல்லாம் அங்கு புத்த பெருமானைக் குடிபுகுத்தியது கடந்து போக இப்போது அரச மரம் நிற்கும் இடமெல்லாம் தொல்லியல் இடங்கள் என அடையாளப்படுத்துவதும் அது சங்கமித்தவால் நாட்டப்பட்டது என வர்த்தமானி வெளியிடுவதும் தமிழினத்தின் பண்பாடு, கலா சாரங்களை சிதைத்து அதில் சிங்கள பௌத்தத்தை திணிக்கும் செயல். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.




அண்மையில் எல்லாவல மேதானந்த தேரர் ஒரு விடய த்தைக் கூறியிருந்தார். அவர் கூறிய விடயத்திற்கும் தற்போதைய தொல்லியல் திணைக்கள நடவடி க்கைகளுக்கும் தொடர்பிருப்பது தெளிவாகப் புலப்படுகிறது.

"வடக்கு- கிழக்கில் உள்ள இந்துக் கோவில்கள் அனைத்தும் பௌத்த விகாரைகள் இருந்த இடம். பௌத்த விகாரைகளை இடித்தழித்துவிட்டு அதன் மேலே இந்துக்கோவில்கள் கட்டப் பட்டுள்ளன" என எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தி ருந்தார்.

குறித்த கருத்தை அவர் தெரி வித்த சொற்ப காலத்துக்குள் சுழிபுரம் பறாளாய் முருகன் கோவிலின் தல விருட்சமான அரச மரம் கோவிலுக்குரியதல்ல அது சங்கமித்தவால் நாட்டப்பட்ட அரச மரக்கிளை என தொல்லியல் திணைக்களம் தெரிவித்ததுடன் குறித்த அரச மரத்தை தொல்லியல் சான்றாக பிரகடனப்படுத்தி வர்த்தமானி வெளியிட்டிருந்தது. அவ்வாறெனின் குறித்த செய ற்பாடு பேரினவாத சக்திகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு ள்ளதோ என தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

பௌத்த விகாரைகளை இடி த்து இந்துக் கோவில்கள் கட்ட ப்பட்டதாக எல்லாவல மேதா னந்த தேரர் தெரிவித்திருந்ததற்கும் பறாளாய் முருகன் ஆலய விரு ட்சம் சங்கமித்தவால் நாட்டப் பட்டது என்பதற்குள்ளும் இருக் கும் உட்பொருளை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தமிழர் பூர்வீகங்களை அத்துமீறி பௌத்த சின்னங்களாய் பிரக டனப்படுத்தும் செயல் எப்பே ற்பட்ட விளைவுகளைத் தரும் என்பதை இனவாத, மதவாத சக்திகள் புரிந்து கொள்ள வேண்டும்.

மீண்டும் இந்த நாட்டில் இரத்த ஆறு ஓட வேண்டும் என விரும்புபவர்களாலேயே இவ் வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை சிங்கள மக்கள் புரிந்து கொண்டு நடக்க வேண்டும்.

மாறாக அவர்களும் குறித்த விடயத்தில் நிதானம் இழப்பவர்களாக இருந்தால் அது நிச்சயம் மீண்டும் இனப் பிரச்சினை எழுவதற்கு வழி வகுக்கும்.

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை முழுமையாக அமுல் படுத்த வேண்டும் என இந் தியா அழுங்குப்பிடி பிடித்து ள்ள நிலையில் குறித்த விட யத்தை திசை திருப்பும் நோக்காகக் கூட மேற்குறித்த அரசமர விடயம் இருக்கலாம்.

ஏனெனில் 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை முழுமையாக அமுல்படுத் தினால் அது தமிழீழம் மலர் வதற்கு ஒப்பாகிறது என சரத் வீரசேகர, ஜெகத் டயஸ், விமல்வீரவன்ச போன்றவர்கள் இனவாதத்தை தூண்டும் கருத்துக்களை தொடர்ச்சியாக கூறிவருகிறார்கள்.

அரச மரம் இருக்கும் இடமெல்லாம் பௌத்தத்திற்கு உரித்தான இடம் என்ற குறுகிய மனப்பான்மையை முதலில் சம்பந்தப்பட்டவர்கள் நிறுத்த வேண்டும்.

இல்லையேல் "அரசால் பிரச்சினை" என எனது அப்பு அன்று கூறிய விடயம் இன்று பலித்து விடும். அது பல உயிர்களைப் பலி எடுத்து விடும்.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## ஏறுபடி மேளம் வந்தால்

### பணிப்புறக்கணிப்பில் கோயில் மேளம்



வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் சிறாப்பரைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

என்ன? இன்னும் சிறாப்பர் கனகசபையைக் காணவில்லை. என்ன சங்கதியோ! கங்காணி கார்த்திகேயன் வினவினார்.

**மூப்பர்**- அவர் கனடாப் பென்சன்காரர். கனடாவிற்குப் போயிற்றார் போல.

மூப்பர் சொல்லி முடிப்பதற்குள் சிறாப்பர் கனகசபை ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

**சாத்திரியார்**- இந்தா சிறாப்பர் வந்திட்டார் அவருக்கு ஆயுள் நூறு.

**சிறாப்பர்**- ஓ! இப்ப அரைக்கிலோ அளவிலே மூன்று நேரமும் மருந்து மாத்திரை போட்டுக் கொண்டு நூறு வருடம் வாழலாம் தானே!

**கங்காணியார்**- அது சரி சிறாப்பர், என்ன சங்கதி இண்டைக்கு லேட்டாப் போச்சுது.

**சிறாப்பர்**- அதை ஏன் கேக்கிறியள். பிறைவேற் கொஸ்பிற்றலுக்குப் போனனான்.அங்க ஒரே சனம். அதில அநேகமானவர்கள் வெளிநாட்டில இருந்து இங்க வந்திருக்கிற எங்கட உறவுகள்.

**கங்காணி**-ஏன்? அவயளுக்கு என்னவாம்.

**சிறாப்பர்**-எங்களுக்கு உடம்பு மெலியுது. அவயளுக்கு உடற்பருமன். வெளிநாட்டில மருந்தெடுக்கிறத விட, இங்க மருந்தெடுக்கிறது இலகு. அதோட மருத்துவரிட்டையும் ஆற அமர இருந்து ஆலோசனை கேட்கலாம் தானே.

**பண்டிதர்**- அப்ப எங்கட பாடும் கஷ்ரம் வரப்போகுது போல...

**சிறாப்பர்**- என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்?

**பண்டிதர்**- இல்லை அவயள் மருந்தெடுத்துட்டு வெளிநாட்டுக்குப் போயிருவினம். பிறகு எங்களையும் வெளிநாட்டுகாரர் எண்டு வைத்தியசாலைகள் நினைத்து மருந்து எழுதினால் எங்கடபாடு கஷ்டம் தானே.

**கங்காணியார்**- பண்டிதர் ஐயா. நீங்கள் நினைக்கிற மாதிரியல்ல. வெளிநாட்டில இருந்து வாற எங்கட உறவுகள் கல்குலேற்றரோட தானே வருகினம்.

சாப்பாட்டுக் கடையில ஏழு பேர் சாப்பிட்டால், உடனே கணக்குப் பாக்கினம். ஆட்டோ பிடிச்சாலும் எவ்வளவு காசு எண்டு கேட்டு குறைச்சுத் தானே கொடுக்கினம்.

**பண்டிதர்**- காசு இருக்குது எண்டு கண்டபாட்டில காசைக் கொடுத்தால் அது நல்ல சூழ்நிலையைப் பாதிக்கும்.

இந்தாப் பாருங்க, எங்கட காரைநகர் வர்த்தகர்கள் தவில் நாதஸ்வரங்களுக்கு இலட்சக்கணக்கில காசைக் கொடுக்கினம்.அதால இப்ப திறமான தவில் நாதஸ்வரத்தை பிடிக்கிறது எண்டால், குறைந்தது மூன்று லட்சம் ரூபா தேவை.

மங்கள வாத்தியத்திற்கு இப்படி ஒரு றேட் ஏறுவதற்கு மூல காரணம் எங்கட காரைநகர் வர்த்தகப் பெருமக்கள் எண்டு பலரும் கதைக்கினம்

**வாத்தியார்**- மங்கள வாத்தியத்திற்கு மட்டுமல்ல, மந்திர உச்சாடனம் சொல்றதுக்கான தட்சணையும் அங்க உச்சமாம்.

இதால ஏனைய கோவில் நிர்வாக[illegible] காத்திரமான சிவாச்சாரியர்களைப் பிடிக்க ஏலாமத் திண்டாடுகினம்.

**பண்டிதர்**- அது தான் நானும் சொன்னனான். எங்கட புலம் பெயர் உறவுகள் இங்க வந்து மருத்துவமனைகளுக்கு அள்ளிக் கொடுக்க, பிறகென்ன வைத்திய சாலைகள் அந்த வழமையைத் தானே பிடிப்பினம். நாங்கள் உள்ளூர் முயற்சியாளர்கள். எங்கட ரூபா உலகத்தில குறைந்த பெறுமதியுடையது.

இதில சீவிக்கிறதே கஷ்டம். இந்த நிலையில அவருக்கு காட்டு. இவருக்குங் காட்டு. உலகத்தில இருக்கக் கூடிய அத்தனை சோதனைகளையும் செய் எண்டால், என்ன செய்ய முடியும்.

**விதானையார்**- பண்டிதர் சொல்லுறது நூறு வீதம் உண்மை. அண்மையில என்ர நண்பர் ஒருவரைச் சந்தித்தன். தன்ர பிள்ளையின்ர திருமணச் சடங்கிற்கு மூன்று லட்சம் ரூபா கொடுத்து மங்கள வாத்தியக் கோஷ்டியை பிடிச்சவராம்.

ஆனால் அந்தக் கோஷ்டியின் தலைவர் கொஞ்ச நேரம் வாசிச்சுப் போட்டு, இடையில எழும்பிப் போயிற்றாராம்.அதற்குப் பிறகு மற்றவர்கள் தான் வாசித்தார்களாம்.அதோட [illegible] வித்துவான் இன்னொரு திருமண வீட்டுக்குப் போய் அங்க வாசிச்சவர் எண்டு அந்த நண்பர் சொல்லிக் கவலைப்பட்டார்.

**பண்டிதர்**-இதையும் விடப் பல திருகுதாளங்கள் நடக்குது.

கோயில்களில மங்கள வாத்தியம் இசைத்தால் அதொரு கலாதிதானே. அந்த நினைப்பில இரண்டு மூன்று கோஷ்டி என்று பிடித்தால், ஒரு சில தவில் நாதஸ்வரங்கள் துணியால போத்துக் கட்டியிருக்கும். சில வேளையில ஒரு கோஷ்டி வாசிச்சால் மற்ற கேஷ்டி டொக்கு... டொக்கு... எண்டு நேரத்தைப் போக்கும்.

இன்னும் சில இடங்களில ஏறுபடி மேளம் வந்தால் கோயில் மேளம் பணிப்புறக்கணிப்புச் செய்யும். இப்படியாக ஏகப்பட்ட திருக்கூத்துகள் நடக்குது.

அது தான் வலம்புரிப் பத்திரிகையின்ர ஆசிரியர் தலையங்கத்தில தவில் நாதஸ்வர இசையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர நுண்கலைத் துறையில ஒரு பட்டப் படிப்பாக்க வேணும். எண்டு எழுதப்பட்டது. என்னைப் பொறுத்தவரை தவில் நாதஸ்வர இசையில் ஒரு டிப்ளோமா கற்கை நெறியை உருவாக்க வேணும்.

கல்வித் தராதரத்திற்கு முன்னுரிமை கொடுக்காமல், தவில் நாதஸ்வரத்தில யாரிடமெல்லாம் பாண்டித்தியம் பெறக் கூடிய தகைமையும் நுட்பமும் இருக்கிறதோ. அவர்களை எல்லாம் டிப்ளோமா கற்கை நெறிக்குள்ள ஈர்க்க வேணும். இதை எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் செய்யாவிட்டால், அடுத்தடுத்த ஆண்டுகளில பத்து லட்சம் ரூபா கொடுத்துத் தான் ஒரு மேளக் கச்சேரியை நடத்த முடியும்.

**விதானையார்**- பண்டிதர் ஐயா சொல்லுறது உண்மை தான். அதோட சேர். பொன். இராமநாதன் நுண்கலைபீடம் என்பதாக நுண்கலைத் துறையின்ர பெயரை சுருக்க வேணும். கலைப்பீடம் , வர்த்தக பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், மருத்துவ பீடம் என்பது போல சேர்.பொன் இராமநாதன் நுண்கலைபீடம் எண்டால் எவ்வளவு அழகாக இருக்குது. இதைவிட்டிட்டு ஒரு நீண்ட பெயரை உச்சரிக்கிற தென்பது பொருத்தமேயில்லை.

**சாத்திரியார்**- தவில் நாதஸ்வரத்தில பட்டம் மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகளை ஆரம்பித்து அந்த இசையை பாதுகாக்க வேணும் எண்ட கருத்தை நான் மனதார வரவேற்கிறேன்.

அதேநேரம் எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமஸ்கிருத துறை ஆரம்ப கட்ட சமஸ்கிருதத்தைப் போதிக்கும் பொருட்டு ஒரு கற்கை நெறியை ஆரம்பிக்க வேணும்.

இதில் அந்தணர்களை மட்டுமல்லாது சைவமாக இருக்கக் கூடிய பிள்ளைகளையும் இணைத்து அவர்களுக்குச் சமஸ்கிருத மந்திரத்தையும் கிரியை முறைகளையும் வேத- ஆகமங்களையும் போதிக்க வேணும்.

இதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை செய்ய வேணும். இதை அவர்கள் செய்யாவிட்டால், எதிர்காலத்தில ஆலயங்களில பூசை செய்வதற்கு சிவாச்சாரியர்கள் இல்லாத ஒரு நிலைமை ஏற்படும்.

இவ்வாறு சாத்திரியார் சதாசிவம் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இத்தனை பாதகங்களையும் தமிழினத் துக்குச் செய்து விட்டு தான் தமிழினத்தை பாதுகாப்போம் என்கிறார்களே?**






**மழைநீரைச் சேகரிக்கும் திட்டங்கள் அதிகரிக்கப்படுமா?**

**வதனன் யாழ்ப்பாணம்**

**பேரினவாத- இனவாதிகளின் போக்கு எங்குபோய் முடியும் வியாசரே?**

மீண்டும் ஒரு இனப் பிரச்சினை ஏற்ப டுத்தும் வகையில் பேசுவதை இனவா திகள் நிறுத்த வேண்டும்.

இவர்கள் தமது சுயநல அரசின் இலா பத்துக்காக இவ்வாறு பேசுவது இரண்டு இனங்களுக்குள் பிரிவை ஏற்படுத்தும் என்பதை புரிந்து கொள்ளாமல் இருக் கிறார்கள் என்பது தான் வேதனை.

மீண்டும் இலங்கையில் இனப் பிரச் சினை ஏற்பட்டால் அது மிகப் பெரும் அழிவைத் தரும் என்பதை முதலில் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இனங்களுக்கிடையில் நல்லிணக் கத்தை ஏற்படுத்த பாடுபட வேண்டியதே தற்போதைய தேவை ஆகும்.

**தர்சன் மந்துவில்**

**பட்டாம்பூச்சியின் வாழ்க்கை எட்டு நாட்களாமே?**

எட்டு நாள் தான் வாழப்போகிறேன் என பாட்டாம்பூச்சி ஒருநாளும் வீட்டு மூலைக்குள் முகம் புதைத்துக்கிடந்ததே இல்லை.

தான் வாழ்வது கொஞ்சக் காலமானாலும் அந்தக் காலத்தில் தன்னால் மற்றவர் களை எவ்வளவு சந்தோசப்படுத்த முடி யுமோ அவ்வளவுக்கு சந்தோசப்படுத்தி விடும்.

அந்த திருப்தியில் அவை இறந்து போகும். ஆனால் மனித இனமோ ஆசை பேராசை என்ற அரக்கனை விழுங்கி விட்டு மரண த்துக்கு நாள் குறித்து அதை எண்ணி எண்ணி நாளுக்கு நாள் இறந்து கொண் டேயிருக்கிறது.

பட்டாம்பூச்சிகளிடம் இருந்து மனிதன் கற் றுக் கொள்ள வேண்டியவை ஏராளம் உண்டு.

**மதுவன் மீசாலை**

**ஆலய வளாகங்களில் நிற்கும் அரச மரங்களிற்கு ஆபத்து ஏதும் இல்லையா வியாசரே?**

அரச மரம் எமது சொத்து. காலம்காலமாய் எமது ஆன்மிக வழிபாடுகளுடன் பின்னிப் பிணைந்தது அரசு. அதை இப்போது பௌத்த த்திற்கு மட்டும் உரியது என்று என அடையா ளப்படுத்தும் செயல் கொஞ்சம் கூட மனசாட்சி அற்ற செயல்.

இச்செயலை அரசு தொடர்ந்து செயற்படுத்துமா யின் மீண்டும் ஒரு இனப் பிரச்சினை எழுவதை எவராலும் தடுத்து விட முடியாது.

அந்தளவிற்கு தமிழர் பூர்வீகங்களை பச்சைப் பொய் சொல்லி அடாத்தாய் கபளீகரம் செய்கி ன்றது அரசு.

என்ன செய்வது தமிழினத்துக்காக குரல் கொடு க்கக் கூடியவர்கள் தற்போது இல்லையே.

இது வேதனையின் உச்சம்.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**தி.கதிர் அல்வாய்**

**தென்னிந்திய சினிமாவைக் கொண் டாடுபவர்கள் ஈழத்து சினிமாவைக் கண்டுகொள்கிறார்கள் இல் லையே?**

முற்றத்து மல்லிகை வாசம் இல்லை என்றொரு பழமொழியுண்டு.

ஈழத்து சினிமாவின் வளர்ச்சி 1970-1980 களில் மிக உச்சத்தில் இருந்தது. என்ன செய்வது காலக்கொடுமை போர் தந்த வலியில் எம் ஈழத்துச் சினிமாவும் நலிவிழந்துவிட்டது.

வின்சர் திரையரங்கில் சிவாஜியின் வசந்த மாளிகை திரைப்படத்திற்கு சம மான பார்வையாளர்களுடன் ஈழத்து திரைப்படமான கோமாளிகள் திரைப் படம் ஓடியதாக எனது தந்தை அடிக்கடி கூறுவார்.

தென்னிந்திய சினிமா, சினிமா என்ற அந்தஸ்தை இழந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. அங்கு நடிப்பிற்கு வேலை இல்லை. வன்முறையும் ஆபாசமும் நிறைந்திருக்கின்றது.

வணிக ரீதியில் வெற்றி பெறுகிறது அவ்வளவே.

**சி.சுரேசன் பத்தமேனி**

**உலக சனத்தொகை அதிகரித்து வரும் நிலையில் உலகளாவிய ரீதியில் சுற்றுச்சூழல் பிரச்சினை ஏற்படுகிறதே?**

நாம் இயற்கையை நேசித்தால்தான் இயற்கை நம்மை நேசிக்கும்.

மனித குலம் மட்டுமல்ல இவ்வுலகில் உயிரின ங்கள் அனைத்தும் சுவாசிக்கின்றன என்றால் அது இயற்கை எமக்கு இட்ட பிச்சை.

இயற்கையிடம் பிச்சை எடுத்து உயிர் வாழும் மனிதன் அந்த இயற்கையையே அழிப்பது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

இயற்கை தன் வழியில் சென்று கொண்டி ருக்கிறது. மனித குலமே அதை இடைமறித்து அதன் சுழற்சியை மாற்றியமைக்கின்றது.

இந்த நிலை மாற வேண்டும். இயற்கையை மனிதன் நேசிக்க வேண்டும். அப்போதே இயற்கை மனிதனை தண்டிக்காமல் இருக்கும் என்பதே மெய்யானது.

**திகான் வடமராட்சி**

**மழைநீரைச் சேகரிக்கும் திட்டங்கள் அதிகரிக்கப்படுமா?**

தற்போது நாட்டில் வறட்சி உச்சம் தொட்டு இருக்கின்றது. பெரிதாக வடக்கில் வறட்சி தாண்டவம் ஆடவில்லை.

ஆனால் எம்மிடம் வறட்சியைச் சமாளிக்க என்ன திட்டம் இருக்கின்றது? எதுவும் இல்லை. இப்போது யாழ்ப்பாணத்தில் புதிய தொழில் மிகத் தீவிரமாக உருவாகிக் கொண்டிருக்கிறது. அதாவது சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் விற் பனை நிலையங்கள்.

இவை மாநகர, பிரதேச சபைகளிடம் அனுமதி பெற்று நடக்கின்றனவா என்பது தெரிய வில்லை. ஒரு லீற்றர் 5 ரூபாய் என பதா கைகள் வைக்கப்பட்டுள்ளன.

இயற்கை தந்த கொடை மழைநீரை மண் ணுக்குள்ளும் கடலுக்குள்ளும் செல்ல விட்டு விட்டு இயற்கையைப் பாதுகாக்கின்றோம் என கட்டுரை எழுதி பயன் ஏதும் ஆகப் போவ தில்லை.

**சுதன் குப்பிழான்**

**இத்தனை பாதகங்களையும் தமிழினத் துக்குச் செய்து விட்டு தான் தமிழினத்தை பாதுகாப்போம் என்கிறார்களே?**

ஒரு நாட்டின் அரசன் தன் மக்களை வஞ்சிக்கின்றான் எனின் அதை விடக் கொடும் செயல் வேறு எதுவும் இல்லை என்பதே பொருள். ஆனால் எமது நாட்டில் அது காலம்காலமாக நடந்து கொண்டேயிருக்கிறது.

ஆட்சி அமைக்கும் அரசுகள் தமிழினத்தை தமது காலில் போட்டு மிதிப்பதை பொழுதுபோக்காக மேற்கொண்டு இருக்கின்றனர். எதிர்த்துக் கேள்வி கேட்பவர்களிற்கு அவர்கள் கொடுக்கும் பட்டம் பயங்கரவாதி.

இந்தக் கொடுமைக்கு அளவே இல்லை என்ற நிலைமையிலே தற்போது தமிழினம் உள்ளது. பிறருக்கு படுகுழி பறித்தவன் அதிலும் மிக மோசமான குழியில் வீழ்வதே வரலாறு. இந்த வரலாறும் ஒருநாள் மாறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: படகோட்டி
பாடகர் : T.M. சௌந்தராஜான்
இசை : விஸ்வநாதன் ராமமூர்த்தி
இயற்றியவர்: வாலி



கொடுத்ததெல்லாம் கொடுத்தான்
அவன் யாருக்காகக் கொடுத்தான்
ஒருத்தருக்கா கொடுத்தான் இல்லை
ஊருக்காகக் கொடுத்தான்

கொடுத்ததெல்லாம் கொடுத்தான்
அவன் யாருக்காகக் கொடுத்தான்...

கொடுத்ததெல்லாம் கொடுத்தான்
அவன் யாருக்காகக் கொடுத்தான்...

மண்குடிசை வாசலென்றால்
தென்றல் வர வெறுத்திடுமா
மண்குடிசை வாசலென்றால்
தென்றல் வர வெறுத்திடுமா
மாலை நிலா ஏழையென்றால்
வெளிச்சம் தர மறுத்திடுமா
உனக்காக ஒன்று எனக்காக ஒன்று
ஒருபோதும் தெய்வம் கொடுத்ததில்லை

கொடுத்ததெல்லாம் கொடுத்தான்
அவன் யாருக்காகக் கொடுத்தான்...

படைத்தவன் மேல் பழியுமில்லை
பசித்தவன் மேல் பாவம் இல்லை
கிடைத்தவர்கள் பிரித்துக்கொண்டார்
உழைத்தவர்கள் தெருவில் நின்றார்

பலர் வாட வாட சிலர் வாழ வாழ
ஒரு போதும் தெய்வம் கொடுத்ததில்லை

கொடுத்ததெல்லாம் கொடுத்தான்
அவன் யாருக்காகக் கொடுத்தான்...

இல்லை என்போர் இருக்கையிலே
இருப்பவர்கள் இல்லை என்பார்
இல்லை என்போர் இருக்கையிலே
இருப்பவர்கள் இல்லை என்பார்
மடி நிறைய பொருள் இருக்கும்
மனம் நிறைய இருள் இருக்கும்
எதுவந்த போதும் பொதுவென்று வைத்து
வாழ்கின்ற பேரை வாழ்த்திடுவோம்

கொடுத்ததெல்லாம் கொடுத்தான்
அவன் யாருக்காகக் கொடுத்தான்....

# அலப்பறையைக்கிளப்பியதா ஜெயிலர்

ஓய்வுபெற்ற ஜெயிலர் முத்துவேல் பாண்டியன் (ரஜினிகாந்த்), தன் மனைவி (ரம்யா கிருஷ்ணன்), மகன் (வஸந்த் ரவி), மருமகள் (மிர்ணா), பேரன் (ரித்திக்) ஆகியோருடன் வசித்து வருகிறார். நேர்மையான காவல்துறை அதிகாரியான அர்ஜுன், சிலை கடத்தல் கும்பலைப் பிடிக்கத் தீவிரமாகச் செயல்படுகிறார். இதை விரும்பாத அந்தக் கும்பல் அவரைக் கடத்துகிறது. எதிரிகளைப் பழிவாங்கவும், தன் குடும்பத்தைக் காக்கவும் தனியாளாகக் களமிறங்குகிறார் ரஜினிகாந்த். ஓய்வுபெறுவதற்கு முன்னான ரஜினி எப்படிப்பட்டவர், சிலை கடத்தல் கும்பலின் பின்னணியில் இருப்பவர் யார், இறுதியில் எதிரிகளிடமிருந்து தன் மொத்த குடும்பத்தைக் காப்பாற்றினாரா போன்ற கேள்விகளுக்கு தன் காமெடி பாணியிலும், ரஜினிகாந்தின் மாஸ் பார்முலாவிலும் திரைக்கதை அமைத்து பதில் சொல்லியிருக்கிறார் நெல்சன்.

மாஸான காட்சிகளிலும், குடும்பத்திற்காகவும் மகனுக்காகவும் உருகும் காட்சிகளிலும் தன் நடிப்பால் திரையை ஆக்கிரமிக்கிறார் ரஜினிகாந்த். முதற்பாதியில், நெல்சன் படக் கதாநாயகர்களுக்கான உடல்மொழியையும், வசன உச்சரிப்பையும் அளவாகவும் அழகாகவும் வழங்கி விசில் வாங்குகிறார்.

மிடுக்கான காவல்துறை அதிகாரியாக வஸந்த் ரவி தொடக்கத்தில் கவர்கிறார். ஆனால், போகப் போகப் படம் முழுவதுமே ஒரே முகபாவனையை வழங்கி ஏமாற்றுகிறார். விநாயகன் பாத்திரம் காமெடி வில்லனா, சீரியஸ் வில்லனா என்று வாய்விட்டுக் கேட்கும் அளவுக்குக் குழப்பியிருக்கிறார்கள். ஆனால், இந்த இரட்டைக் குதிரை சவாரியை தன் சிறப்பான நடிப்பின் மூலம் சரி செய்திருக்கிறார்.

மிரட்டும் இடத்தில் மிரட்டி, காமெடி வேண்டிய இடத்தில் சிரிக்க வைத்து அட்டகாசம் செய்திருக்கிறார். பேரனாக ரித்திக்கின் நையாண்டிப் பேச்சு சில காட்சிகளில் சிரிப்பாகவும், ஏனைய இடங்களில் மிகையாகவும் தெரிகிறது.

யோகி பாபு முதற்பாதியில் மட்டுமே சிரிக்க வைக்கிறார். ஏனைய இடங்களில் கூட்டத்தோடு கூட்டமாக வந்து போகிறார். சுனில், ரெடின் கிங்ஸ்லி, சுனில் ரெட்டி ஆகியோர் இரண்டாம் பாதி காமெடிக்கு ஓரளவிற்குக் கைகொடுத்திருக்கின்றனர். மோகன் லால், சிவராஜ்குமார் ஆகியோர் தலா இரண்டு காட்சிகள் வந்தாலும், தேவையான மாஸைக் கடத்தியிருக்கிறார்கள்.

ரம்யா கிருஷ்ணன், மிர்ணா போன்ற முக்கிய பெண் கதாபாத்திரங்களை இன்னும் அழுத்தமாக எழுதி, கதைக் கருவிற்கு வலுசேர்த்திருக்கலாம். இவர்கள் தவிர, துணை காமெடியன்கள், துணை வில்லன்கள், துணை கதாபாத்திரங்கள் என ஜாக்கி ஷெராஃப், மாரிமுத்து, தமன்னா, ஜாபர் சாதிக், கிஷோர், சரவணன், அறந்தாங்கி நிஷா, விடிவி கணேஷ், நாகேந்திர பாபு ஆகியோரால் திரைக்கே மூச்சு முட்டுகிறது.

ஒரு வழக்கமான ரஜினிகாந்த் பார்முலா மாஸ் கதையை தன் ஸ்டைலில் சொல்ல முயன்றிருக்கிறார் நெல்சன். அதில் பாதி கிணற்றைத் தாண்டியிருக்கிறார். தன் குட்டி பேரனின் யூட்ரியூப் சேனலுக்கு உதவிக் கொண்டு, தன் குடும்பத்துடன் அமைதியான வாழ்க்கை வாழும் அப்புராணி கதாநாயகன் ரஜினிகாந்த், மீண்டும் மாஸாக ஆக்ஷன் அவதாரம் எடுக்கும் அத்தியாயத்தைப் பேசும் முதற்பாதி, நெல்சன் படமாகவும் ரஜினிகாந்த் படமாகவும் சிறப்பான கலவையாக ஜெயித்திருக்கிறது.

திடீர் ஆக்ஷன் அவதாரம் எடுக்கும் ரஜினிகாந்த், யோகி பாபுவிற்கும் ரஜினிகாந்திற்குமான காமெடிகள், குடும்பத்திற்காக ரஜினிகாந்த் பதறும் இடங்கள், வில்லன் விநாயகனின் மிரட்டல்கள் என எல்லாமே சரியாகக் கைகூடியிருக்கின்றன.

முதற்பாதி முழுவதும் பில்டப்புகளால் எழுதப்பட்டிருக்கும் ரஜினிகாந்த் கதாபாத்திரத்தின் பின்கதையில் அந்த சில நிமிட பிளாஷ்பேக் காட்சிகள் தவிர்த்து, சினிமா ஷூட்டிங், கடத்தல் முயற்சி என்று கம்பு சுற்றியிருக்கிறார்கள்.

ரஜினிகாந்திற்கு இணையாக எழுதப்பட்டிருக்க வேண்டிய பிரதான வில்லன் விநாயகனின் கதாபாத்திரம் அழுத்தமில்லாமல் அந்தரத்தில் தொங்குகிறது. கத்துவது, வேறு வேறு மாடலேஷனில் பேசுவது என என்னென்னமோ செய்கிறார். சிலை கடத்தலை வைத்தாவது அக்கதாபாத்திரத்திற்குக் கொஞ்சம் சுவாரஸ்யம் சேர்த்திருக்கலாம்.

இதன் பின்னணியிசையால் ஒவ்வொரு காட்சிக்கு எனர்ஜி ஏற்றியிருக்கிறார் அனிருத். படம் முழுவதும் ரஜினிகாந்திற்கு இணையாக அனிருத்தும் "அலப்பறை" செய்திருக்கிறார்.

மொத்த இந்தியாவுமே அலறும் "பேன் இந்தியன்" ஆக்ஷன் அவதாரமாக இருக்கும் ரஜினிகாந்த் ஏன், சுமாரான ஒரு வில்லனுடன் நாள் கணக்காக மல்லுக்கட்டிக்கொண்டிருக்கிறார் என்ற கேள்வி எழுகிறது.

வில்லன் வீடு வரை கேமரா வைத்து வாட்ச் செய்கிறவர், அதிரடி நடவடிக்கையாக எதுவுமே எடுக்காமல் வில்லன் இழுத்த இழுப்புக்கு எல்லாம் ஓடுவது ஏன் என்பதும் விளங்கவில்லை.

இந்தக் குறைகளை எல்லாம் ரஜினிகாந்த் தன் நடிப்பாலும் அனிருத் தன் இசையாலும் கூட்டணி போட்டு மறைக்க முயன்றிருக்கிறார்கள். மோகன் லால், சிவ ராஜ்குமார் ஆகியோருக்கு வைக்கப்பட்ட மாஸ் காட்சிகள் இரண்டாம் பாதிக்கு ப்ளெஸ்ஸாக மாறியிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏலியன்கள் இருக்கிறார்களா... இல்லையா? சர்வதேச சந்தேகம்



'கடவுள் இருக்கிறாரா... இல்லையா?' என்ற சந்தேகத்தைப்போலவே எப்போதும் சுவாரஸ்யம் தருவது 'ஏலியன்கள் எனும் வேற்றுகிரக வாசிகள் உண்மையிலேயே இருக்கிறார்களா... அவர்களின் வாகனமான பறக்கும் தட்டு என்னும் விண்கலம் பூமிக்கு வந்து போவது உண்மையா?' என்பது. இது குறித்து முதன் முறையாகப் பொது வெளியில் ஓர் உரையாடலை நடத்தி, பரபரப்பைக் கிளப்பியிருக்கிறது அமெரிக்கா!

58 சதவிகித அமெரிக்கர்கள் ஏலியன்கள் இருப்பதை நம்புகிறார்கள். அவர்களில், பலர் ஏலியன்கள் பயன்படுத்துவதாக நம்பப்படும் யூ.எஃப்.ஓ (Unidentified Flying Object) எனும் பறக்கும் தட்டுகளை நேரில் பார்த்ததாகவும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அதிகாரபூர்வமாக இது குறித்து அமெரிக்க அரசோ, அரசின் பிரதிநிதிகளோ வாய் திறந்ததில்லை. இந்த நிலையில், கடந்த 26ஆம் திகதி அமெரிக்காவின் பல்வேறு கட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் முன்பாக, ஏலியன்கள் குறித்த தங்களின் சாட்சியங்களைச் சொல்லியிருக்கிறார்கள் அந்த நாட்டு அரசின் மூன்று முக்கியப் பிரமுகர்கள்.

முதல் சாட்சியம் அமெரிக்க முன்னாள் புலனாய்வு அதிகாரியான டேவிட் கிரஸ்ச். அவர் பேசும்போது, "அமெரிக்க அரசாங்கம் ஏலியன்களின் வாகனத்தைப் பலமுறை சேதப்படுத்தியிருக்கிறது. ஏலியன்களின் உடல் பாகங்களும் கிடைத்திருக்கின்றன. அவற்றை 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அமெரிக்க அரசு ஆய்வுக்கு உட்படுத்திவருகிறது. அதேபோல ஏலியன்களின் சேதமடைந்த விண்கலத்தை ரிவர்ஸ் இன்ஜினீயரிங் தொழில்நுட்பம் மூலமாக மறு உருவாக்கம் செய்யும் ஆய்வுகளும் நடைபெற்றுவருகின்றன. ஆனால் இது குறித்து மக்களுக்கோ, மக்கள் பிரதிநிதிகளுக்கோ தெரிவிக்காமல் அரசு மறைத்துவருகிறது. ஏலியன்களின் விண்கலத்தைப் பார்த்த 40 பேரின் சாட்சியங்களை நானே சேகரித்திருக்கிறேன். அவர்கள் ராணுவ அதிகாரியாகவோ, பைலட்டாகவோ இருந்தபோதும், ஏலியன்கள் குறித்துப் பேசிய காரணத்துக்காக நிர்வாகரீதியாக ஒடுக்குதலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். என்னால் இவ்வளவுதான் பொதுவெளியில் பேச முடியும்" என்று கூறியிருக்கிறார்.

கடற்படையின் முன்னாள் கமாண்டர் டேவிட் ஃபிரேவர் சாட்சியம் அளித்தபோது, "2004ஆம் ஆண்டு பசுபிக் பெருங்கடலுக்கு மேல் நான் விமானத்தை இயக்கிக் கொண்டிருந்தபோது, சுமார் 80 ஆயிரம் அடி உயரத்தில் யூ.எஃப்.ஓ ஒன்று என் பார்வையில் தென்பட்டது. பார்ப்பதற்கு சிலிண்டர் வடிவத்தில் இருந்த அது நிச்சயமாகப் புவியீர்ப்பு விசைக்கு எதிரான ஒரு வாகனமாக இருக்கும் என்று நான் கணித்தேன். அது ரேடாரில் சிக்கவில்லை. இது குறித்து ரிப்போர்ட் செய்ததற்காகவும், வீடியோ எடுத்ததற்காகவும் துறைரீதியான அழுத்தங்களை நான் சந்தித்தேன். 2015ஆம் ஆண்டும் இதே போன்று ஒரு சம்பவம் நடந்தது" என்றார்.

முன்னாள் கடற்படை பைலட்டான ரயன் கிரேவ்ஸ் தனது சாட்சியத்தில், "2014ஆம் ஆண்டு நான் ஓட்டிக்கொண்டிருந்த எஃப்-18 ஹார்னெட் ரக விமானத்தின்மீது யூ.எஃப்.ஓ ஒன்று மோதியது. இந்த விபத்து அமெரிக்காவின் விர்ஜினியா கடற்கரைக்கு 10 மைல் தொலைவில் நடைபெற்றது. அது குறித்து என் உயரதிகாரிக்குத் தகவல் சொன்னபோது, அவர் உடனடியாக என்னைத் தரையிறங்கச் சொன்னார். 'ஒருவேளை அது ஏலியன்களின் விண்கலமாக இருக்கலாம்... நான் அதைப் பின்தொடர்ந்து செல்லட்டுமா?' என அனுமதி கேட்டபோது அவர் தடுத்துவிட்டார். இந்தச் சம்பவத்தை மக்களுக்குத் தெரியாமல் மறைத்தவர்கள், வேலையிழப்பு அபாயத்துக்கும் என்னைத் தள்ளினார்கள்" என்றார்.

இவர்களின் சாட்சியங்களைக் கேட்டுக்கொண்ட அரசியல் கட்சிக்குழுவின் தலைவர் க்ராத்மேன், "நிச்சயமாக இது குறித்து விசாரிக்க ஒரு விசாரணை அமைப்பு ஏற்படுத்தப்படும்" என்று வாக்குறுதி தந்திருக்கிறார்.

இந்த சாட்சியங்கள் குறித்து அறிவியல் எழுத்தாளர் ராஜ் சிவாவிடம் கருத்து கேட்டோம். "இவர்கள் மூவரில் முன்னாள் புலனாய்வு அதிகாரியான டேவிட் கிரஸ்ச்சின் சாட்சி மிகவும் முக்கியமானது. ஏனென்றால், பறக்கும் தட்டுகள் பூமிக்கு வந்தது பற்றிய 'ரோஸ்வெல் சம்பவம்' இதுவரை வெறும் கட்டுக்கதை என்றே நம்பப்படுகிறது. ஆனால், டேவிட் கிரஸ்ச் அது உண்மையாக நிகழ்ந்தது என்கிறார். அறிவியல் வளர்ச்சி மிகப்பெரிய உச்சத்தைத் தொட்டிருக்கும் காலத்தில் இது போன்ற சாட்சியங்கள், உரையாடல்கள் அவசியம். அதேநேரம் ஹாலிவுட் படங்களில் காட்டப்படுவது போன்ற தோற்றங்களில்தான் ஏலியன்கள் இருக்கும் எனக் கருதவேண்டியதில்லை. வேற்றுகிரகத்தில் புழு வடிவம்கொண்ட ஓர் உயிரினம் கண்டறியப்பட்டாலும்கூட அதுவும் ஏலியன்தான்" என்றார்.

"எல்லா யூ.எஃப்.ஓ-க்களும் ஏன் அமெரிக்காவிலேயே தென்படுகின்றன. ஒருவேளை அந்த நாட்டு ராணுவத்தின் கண்காணிப்புப் பொறியாகக்கூட அது இருக்கலாமே... அதனாலேயே அது பற்றிப் பொதுவெளியில் பேசியவர்களுக்கு அரசு நெருக்கடி கொடுத்திருக்கலாம் இல்லையா?" என்று கேட்கிறார்கள் இந்த கருத்துகளை ஏற்க மறுப்போர். எப்படியோ, மீண்டும் பரபரப்பாகும் வேற்றுகிரகவாசிகள் குறித்த விவாதங்களால் மகிழ்ச்சியில் ஆர்ப்பரிக்கிறார்கள் ஏலியன் பிலீவர்ஸ்!

ஏலியன்கள் குறித்த அமெரிக்கச் செய்திகள் அடங்குவதற்குள், சென்னைக்கு அருகே நான்கு பறக்கும் தட்டுகள் ஒரே நேரத்தில் பறந்து செல்வது போன்ற புகைப்படங்கள் வெளியாகியிருக்கின்றன. சமூக வலைதளங்களில் லைக் வாங்குவதற்காக இளைஞர்கள் உருவாக்கிய படமாக அது இருக்கலாம் என்று இதைச் சாதாரணமாகக் கடந்து போய்விட முடியாது. காரணம், இந்த புகைப்படத்தை எடுத்தவர் தமிழக காவல்துறையில் சி.பி.சி.ஐ.டி டி.ஜி.பி ஆகப் பணியாற்றி ஓய்வுபெற்றவரும், ஃபிரெண்ட்ஸ் ஆஃப் போலீஸ் நிறுவனருமான பிரதீப் வி பிலிப்!

கடந்த 26ஆம் திகதி தன் மனைவியுடன் சென்னை கிழக்கு கடற்கரைச் சாலையிலுள்ள முட்டுக்காட்டில் தங்கியிருந்தபோது, மாலை 5:30 மணியளவில், வானில் சுமார் 60 கிலோமீற்றர் தொலைவில் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான நான்கு பறக்கும் தட்டுகளைக் கண்டதாக அவர் தெரிவித்திருக்கிறார். அவரிடம் பேசினோம். "முதலில் அவை கண்களைக் கூசும் வெளிச்சத்தில் நின்று நின்று ஒளிர்ந்தன. முதல் புகைப்படத்தை எடுத்த அடுத்த சில நிமிடங்களில் அவை வெகுதூரம் பறந்துவிட்டன. ஏலியன்களின் விண்கலங்கள் மட்டுமே சத்தமின்றி இவ்வளவு தூரத்தைக் கடக்க முடியும்" என்றார்.

# பேஸ்புக் மார்க் சக்கர்பெர்க்

கல்லூரி மாணவர்கள் உரையாட 2004இல் ஆரம்பிக்கப்பட்டது தான் ஃபேஸ்புக். அப்போது அவருக்கு வயது 19 மட்டுமே!

1. சமூக வலைத்தள உலகின் சக்கரவர்த்தியாக வலம் வரும் 39 வயதே ஆன மார்க் எலியட் சக்கர்பெர்க் 1984 மே 14இல் நியூயார்க்கில் பிறந்தார். தந்தை, பல் மருத்துவர், தாய், மனநல ஆலோசகர். சக்கர்பெர்க்குக்கு மூன்று சகோதரிகள்.

2. ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியலும், மனநல மருத்துவ சிகிச்சைக்கான படிப்பையும் முடித்துள்ளார் மார்க் சக்கர்பெர்க்.

3. சிறு வயதிலேயே கம்ப்யூட்டர் புரோகிராமிங்கில் கலக்கிய மார்க், 12 வயதில் தந்தையுடைய கிளினிக்குக்கு வருபவர்கள் பற்றிய தகவலை ரிசப்ஷனில் இருப்பவர் அங்கிருந்தே சொல்லும் அப்ளிகேஷனை உருவாக்கினார்!

4. கல்லூரி மாணவர்கள் உரையாட 2004 இல் ஆரம்பிக்கப்பட்டது தான் ஃபேஸ்புக். அப்போது அவருக்கு வயது 19 மட்டுமே!

5. படிப்பை முடிக்காமலேயே கல்லூரியிலிருந்து வெளியேறிய மார்க், 2008இல் நான்கே ஆண்டுகளில் உலகின் மிக இளம் வயது பில்லியனர் என்கிற இடத்தைப் பிடித்தார்.

6. ஃபேஸ்புக்கின் சி.இ.ஓ பதவிக்கு அவருக்குக் கொடுக்கப்படும் ஆண்டுச் சம்பளம் வெறும் ஒரு டொலர்தான். ஆனால் பல்வேறு படிகள், சலுகைகள் ஆகியவை மட்டுமே ஆண்டுக்கு 23.4 மில்லியன் டொலர் கொடுக்கப்படுகிறது.

7. 2021 நவம்பரில் மெட்டா என்ற நிறுவனத்தைத் தொடங்கினார் மார்க். தற்போது மெட்டாவின்கீழ் ஃபேஸ்புக், வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம், த்ரெட்ஸ் போன்ற சமூக வலைதளங்கள் செயற்படுகின்றன.

8. 2003இல் பிரிசில்லா சானை சந்தித்தார். மார்க், 2012இல் ஃபேஸ்புக் ஐ.பி.ஓ வந்த மறுநாள் திருமணம் செய்துகொண்டனர். இவர்களுக்கு மேக்சிமா, ஆகஸ்ட் மற்றும் ஆரெலியா என்று மூன்று மகள்கள் உள்ளனர்.

9. மார்க்கின் தற்போதைய சொத்து மதிப்பு 115 பில்லியன் டொலர். உலகின் பெரும் பணக்காரர்களில் 7ஆம் இடத்தில் இருக்கிறார்.

10. ஃபேஸ்புக்மீது பல குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. 2021 ஒக்டோபரில் ஃபேஸ்புக் மூலம் தனிநபர்களின் தகவல்கள் கசிவதாக எழுந்த புகாரை அடுத்து, சில மணி நேரங்களில் அவருடைய சொத்து மதிப்பு 6 பில்லியன் டொலர் குறைந்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையகம் 200



எத்தனை ஆண்டுகள் மலர்ந்தாலும்
எங்கள் நிலை மாறிடுமா
தெரியவில்லை

கூண்டு கிளியாவோம் நாம் இங்கே
கூடை சுமக்கும் இளமானோம்
நாம் இங்கே
மாண்டு மடியும் வரை நாம் இங்கே
மலையேறும் எறும்பாவோம் நாம் இங்கே

தூண்டிலுக்கு புழுவானோம் நாம் இங்கே
துடிக்கின்ற மீனாவோம் நாம் இங்கே
மலையகத்தின் மரமாவோம் நாம் இங்கே
மற்றவருக்கு நிழலாவோம் நாம் இங்கே

கண்ணுக்கு இமையாவோம் நாம் இங்கே
கடவுளுக்கு சுமையானோம் ஏன் இங்கே
ஆட்சிகள் ஆயிரம் தான் மாறினாலும்
அடிமைத்தனம் மாறவில்லை
இன்று வரை என்ன செய்வோம்
துரியோதனன் சபை நடுவே
துயில் கலைக்கும் துர வதைகள்
இளமானோம் நாம் இங்கே

துரையரசன்,
ஓட்டுசுட்டான்

## நம் நாடு! நம் மக்கள்!

தவறுகள் மன்னிக்கப்படும்
அதுவே அது மீறப்படின்
தண்டனைகள் வழங்கப்படும்
என்று நாம் நம்புகின்றோம்
ஆனால் இது நியமா....?

ஹா ஹா நியம் என்ன நியம்
அது கிடக்க நியமென வாழாது
பயமென வாழப்பழகு இதுவே
இவ்வுலகின் தற்போதைய கருப்பொருள்

சாதி ,இனம் ,மதம்,மொழி என்பவைதான் என்ன..?
ஒருவரை மற்றொருவரிடம் இருந்து பாகுபடுத்தவா!!
அல்லவே அல்ல ..........

அது அவளின் திறமையைக் குறிக்கின்றது
அவளின் வறுமையை அல்ல,

அது அவளின் உரிமையைக் குறிக்கின்து
அவளின் கொடுமையை அல்ல

அது அவளின் ஒற்றுமையைக் குறிக்கின்றது
அவளின் வேற்றுமையை அல்ல,

அது அவளின் அறிவாற்றலை குறிக்கின்றது
அது அவளின் அறியாமையை அல்ல

எம் நாடு ,எம் மக்கள் ,எம் வீடு இதுவல்ல நியம்
அன்பர்களே இது நம் நாடு,நம் மக்கள் ,நம் வீடு


ஒற்றுமை தான் பலமே இது தவிர்ந்த
வேற்றுமை என்றுமே பலவீனம் தான்....

உதாரணங்கள் பல இதற்கு
அப்போதும் இப்போதும் எப்போதும்

ஜே. சுப்ரமணி.

## போலிக் கிளர்ச்சி

பச்சிளம் மொட்டுக்களாய் அவதரிக்கையில்
உலகையே ஜெயித்தாய் பெருமை கொண்டு
பூக்களாய் மலரும் வேளையிலே
மனதால் தாமும் மலர்ந்து
தம் பிள்ளை சாதிக்குமென
திடமாய் நம்பி எதிர்பார்க்கும்
பெற்றோரின் நம்பிக்கையில்
இடியை வீசி அழித்து விட்டு
காதல் என்ற பெயரால் வரும்
பருவ மயக்கம் என்னும் பள்ளத்தில் வீழ்ந்து
தாமும் அழிந்து சமுதாயத்தையும் சீரழிக்கின்றனர்
எதிர்காலத்தை உருவாக்க வேண்டிய
இளம் சந்ததிகள் பல......



இ.இளமதி,
யா/வேம்படி உயர்தர மகளிர் பாடசாலை.

## மௌனத்தின் தேடல்- 681



## பாகுபாடு

நன்றி கெட்ட மனிதர்
வாழும் இவ்வுலகில்
நாய்கள் தான் மனித
தோழனா ? இல்லை
அதிலும் பாகுபாடு
காட்டுகிறான் மனிதன்

க. திருமகள்,
பண்டத்தரிப்பு.

## நன்றி இல்லா மனிதன்

அன்று ஆதி மனிதனுடன்
ஒட்டி வாழ்ந்த முதல் இனம்
நன்றி இல்லா மனிதனால்
இன்று தெருவோரங்களில்...

பி.மதுஷ்சன்,
தையிட்டி.

## விதியும் பசியும்

பிறவிப் பெருங்கடலில்
இறுதிப் பிறப்பென்றும்
செய் நன்றிக்கென்றும்
செயல் வடிவம் கொடுப்பவரென்றும்
கணிக்கப்பட்டு கவனிக்கப்படுகிறார்
தனிப்பட்ட ஆர்வலர்களாலும்
அமைப்புக்களால் அமைக்கப்பட்ட
காப்பகங்களும் காப்பாற்றினாலும்
விதியின் செயலென்று பசியுடன்
வீதியில் அலைவதுமுண்டு

க. நாகராசா,நுணாவில்

## தாயுமானவன்

தாயில்லாப் பன்றிக்
குட்டிகளுக்கு
தாயாய் வந்து
பாலூட்டிய
தாயுமானவன் போல் கள்ளம்
கபடமில்லா வெள்ளை
உள்ளச் சிரிப்புடன்
நாதியற்று வீதிதனில்
திரியும் நாய்கள் தனை
அன்பாய் அரவணைத்து
மௌனக்கதை பேசி
மகிழ்வுடன் உணவளித்து
உவகை கொள்ளும்
வள்ளலே
நீர் இப் பூலோகத்
தாயுமானவன்

சி . மகாலட்சுமி,
கொக்குவில்.

## மௌனத்தின் தேடல்- 682



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

## இவனோ மனிதன்!

உங்கள் உள்ளம் களங்கமற்றது
வாலையாட்டி நன்றி சொல்லும்
வஞ்சனையற்ற ஜீவன் நீங்கள்
ஆனால் இவனோ மனிதன்
உள்ளத்தில் கள்ளம்
உதட்டில் சிரிப்பு
பாசாங்கில் ஏமாந்து போகாதீர்
கூட்டத்தோடு நீங்கள் நாளை
தைவானுக்கு பயணம் ஆவீர்
நாய் இறைச்சிக்கு நல்ல மௌசு

பி.யதுர்சன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## காருண்யம்

வாழும் காலம் கொள்ளும்
எனினும்
பரந்த பூமிதனிலே சுய நல
உணர்வோடு
வாழ்ந்திடும் மனிதர்களோடு
ஒட்டி உறவாடுவதை விட
நன்றி மறந்திடா ஜீவனோடு
நம்மை மறந்து கதைகள் பேசி
அன்பு மழை பொழியும்
அற்புத தருணம் பேரின்பமே!

ஆ.பாலமதுஜா,
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலத்தின் பதிவு 72

# கடல்புறா

## நீர் மோகினி

மஞ்சளழகியின் பாவாடை நடனத்தில் விசிறிய விசிறல் கண்களின் மயக்கமான பார்வை சங்குக் கழுத்தின் அசைவுகள் இத்தனையும் மாறி மாறி அவன் மனத்திலே தோன்றி அவனை உறங்கவொட்டாமல் அடித்தன.

உறக்கமே மனிதனுக்கு இன்பமும் சாந்தியும் அளிப்பதென்பதை இளையபல்லவன் உணர்ந்திருந்தான் ஆனால் அந்த உறக்கத்தை விட இன்பமானவை. மஞ்சளழகியைப் பற்றிய நினைப்புகள் என்பதை அவன் அறிந்து கொண்டனாலும். அதில் சாந்தி மட்டும் பூஜ்யம் என்பதைப் புரிந்து கொண்டான்.

இப்படி, மஞ்சளழகியைப் பற்றியும், அவனாலும் அன்றைய இரவில் கடற்கரையில் நிகழ்ந்துவிட்ட விபரீத சம்பவத்தாலும் தனக்கு ஏற்பட்டு விட்ட பொறுப்பைப் பற்றியும் நினைத்தே, இராப்பொழுதை ஓட்டிவிட்ட இளையபல்லவன் கருக்கல் சமயத்தில் படுத்துச் சிறிது நேரம் மட்டுமே கண்ணயர்ந்து உதய காலத்துக்குச் சற்று முன்பே எழுந்து தளத்துக்கு வந்து சேர்ந்து சுற்று முற்றிலும் பார்த்தான். அக்ஷய முனையின் உதயகாலம் பேரின்பத்தையும் பெரும் பயத்தையும் கலந்து அளித்துக் கொண்டிருந்தது.

தூரத்தே புகைத்து கொண்டிருந்த பகிட்பாரிஸான் எரிமலைத் தொடர் உச்சியும், ஏதோ பல வருஷங்களுக்கு முன்னால் அது கக்கிவிட்ட கந்தகம் கலந்த கனிப்பிழம்பின் காரணமாகப் பழுப்புத் தட்டிக் கிடந்த அதன் சரிவுகளும் அருணோதயத்தின் சிவப்பில் அக்ஷய முனையை நாடி வருபவர்களை எரித்து விடுவனபோல் காட்சியளித்தன.

அதன்புழுக்கர்களைக்கொண்டே கட்டப்பட்ட கோட்டையும் மதிலும் பெரும் காராக்கிரகமாகவே கண்ணுக்குத் தென்பட்டன. அந்தப் பகுதியை ஒருமுறை கூர்ந்து நோக்கிவிட்டு மீண்டும் நீர்ப்பகுதியையும், எழுப்பி எழுப்பி வந்த திரைகளை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்த அலைகளையும் கவனித்த இளையபல்லவன். அருணோதயத்தில் அந்த நீர்ப்பகுதி அளித்த மனோகரக் காட்சியில் மனத்தைப் பெரிதும் பறிகொடுத்தான்.

அந்த நீரில் மிதந்துவந்த காலையில் சில்லென்ற காற்று அவன் முகத்தை மிகுந்த சுகத்துடன் தடவிக் கொடுத்து, முந்திய நாள் இரவு தூக்கமின்மையால் ஏற்பட்ட உடல் உஷ்ணத்தைச் சமனம் செய்ய முயன்றது. சாரதி அருணனைத் தொடர்ந்து கிழக்குப்புறத்தில் தலைகாட்டிய பரிதியும் அந்தக் கடல் பகுதியை தன் கிரணங்களால் மிக அற்புதமாக அடிக்கத்துவங்கினான்.

சித்திரைத் திங்களின் அந்தக் காலை நேரம் சிறிது ஏறினாலும் வெப்பம் மிகவும் ஏறி அந்தக் கடற்கரைப் பிராந்தியத்தைத் தரிக்கத் தொடங்கிவிடும் என்பதை முதல்நாள் காலையில் அறிந்திருந்த இளையபல்லவன், குளிர்ந்த சமயத்தில் அந்தக் கடலில்

தனது நீராட்டத்தை முடித்துக் கொண்டால், சற்று வெய்யில் ஏறி கோட்டைப் புறம் விழித்தெழுந்ததும் தான் பலவர்மனைச் சந்தித்து மேற்கொண்டு நடக்க வேண்டியதைக் கவனிக்கலாமென்ற முடிவுக்கு வந் தான். ஆகவே கீழே அரபு நாட்டுச் சராயொன்றை அணிந்து, மேலே துவட்டிக் கொள்ளச் சிறு துண்டொன்றையும்தோளில் போட்டுக் கொண்டு மார்பில் புலிநகத் தங்க ஆரம் ஆட ஆயுதமேதும் எடுத்துக் கொள்ளாமல். படகொன்றில் ஏறி தானே படகைத் துடுப்புகளால் துழாவிக் கொண்டு கரையை அடைந்தான்.

கரையை அடைந்ததும் அந்த இடத்தில் தன் நீராட்டத்தைத் துவங்காமல் கொள்ளைக்காரர் குடிசைகளுக்கு அப்பாலிருந்த தனியிடத்தை நோக்கிச் சென்று அலைகளில் இறங்கி நீந்தினான்.

(தொடரும்)

---

## நான் வைரமுத்து பேசுகிறேன்... 18

## எனது பார்வையில் கண்ணதாசன்


**"பட்டமரம் பாலூறும்**
**பாகற்காய் தேனூறும்**
**உளுத்தமரம் தான் தழையும்**
**உத்தமியாய் வாசலிலே."**

என்று பாடும் அந்தக் கல்வியறிவில்லாத தாய் கம்பனுக்கு மகளாகிறாள்.

அவளுக்கோர் ஆசை.

தன் சின்னஞ்சிறு மகனை முன்னே நடக்கவிட்டு அவன் நடை பார்க்க வேண்டும்.

நடந்து முடிந்ததும் அவன்



தடம் பார்க்க வேண்டும்.

இப்படி ஒரு கனவையும் தன் கர்ப்பத்தோடு அவள் சுமந்து வந்த துண்டு. ஆனால், தார்ச் சாலையில் தடம் பார்க்க முடியுமா?

முடியாது.

தடம் பார்ப்பதற்கென்று ஓர் இடம் பார்க்கிறாள்.

**"வடக்கே மழைபெஞ்சு**
**வார்ந்த மணல் ஓடிவர**
**நடந்துபோ பாலகனே – உன்**
**நல்ல தடம் நான் பார்க்க."**

புனல் மெழுகிப் போன மணல் தான் அவளது பத்து மாதப் பௌர்ணமி நடந்து வரும் பாதையாகிறது.

அந்தத் தாயின் கோடுதாண்டாத கற்பனைக்குள் நான் கரைந்து போகிறேன்.

"என் பேனாவை நீ கொஞ்சம் தொட்டுத் தரமாட்டாயா தாயே" என்று முகம் தெரியாதவனிடம் முறையிடுகிறேன்.

ஊறிய விழிக்காமல் உள் மனசுக்குள் உறங்கும் ஆசைகளும் பொத்தி வைத்த காதலும் மாறுவேஷம் போட்டல்லவா வெளிரே வேண்டியிருக்கிறது!

**"தும்புச் செருப்பு மாட்டித்**
**தொழுதிறக்கப் போற மன்னா!**
**தும்பைப்பூ வேட்டியிலே**
**துவண்ட மஞ்சள் நான்தானா?"**

அடடே, அந்தக் கேள்விக்குள்தான் எத்தனை காதல் திரண்டிருக்கிறது!

'மணிமேகலையில் சோலையின் அடர்த்தியைச் சொல்லவந்த புலவன் "வெயினுழை அறியாக் குயினுழை பொதும்பர்" என்று பிரமிக்கிறான்.

அதாவது – அந்தச் சோலையில் குயில் நுழைய முடியுமே தவிர, வெயில் நுழைய முடியாது என்று வியக்கிறான்.

ஆனால் ஒரு நாட்டுப் புறக்கவிஞன் ஒரு வரியில் சாத்தனாரின் கற்பனைக் கதவைச் சாத்திவிடுகிறான்.

சாத்தனார் சோலைக்குள் நுழைவதற்குக் குயிலுக்கு அனுமதி கொடுக்கிறார்.

ஆனால் நாட்டுப்புறக் கவிஞனோ ஓர் 'ஈ' கூட நுழைய முடியாது என்கிறான்.

காரணம் – அடர்த்தியான அந்தச் சோலையில்

**"ஈப் புகுந்தால் இறகொடியும்"**

என்று எச்சரிக்கிறான்.

இது என்ன? ஒரு புலவனுக்கு உழவன் விட்ட சவாலா?

புழுதிக்குள் புதைந்து போன பல வாழ்க்கைகள், நிறைவேறாத ஆசைகளின் நியாயமான கொந்தளிப்புகள், முளைத்து முளைத்து பூமிக்குள்ளேயே கருகிப்போன பல காதல்கள்.

இவைகளையெல்லாம் பதிவு செய்து வைத்திருக்கும் பத்திரங்களே நாட்டுப் பாடல்கள்.

அவற்றை நாடோடிப் பாடல்கள் என்று மரியாதை தெரியாமல் சொன்னவர்கள் மறைந்து விட்டார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

360

வலம்புரியின் மருத்துவச்சுடர்

உயர்குருதி அழுக்கம் (Hypertension), நீரிழிவு (Diabetes), முடியுரு நாடி நோய் (Ischemic Heart Disease- இருதய நோய்), பாரிச வாதம் (CVA- Cerebro Vascular Disease), நாள்பட்ட சிறுநீரக வியாதி (CKD-Chronik Kidney Disease) போன்றவை நாள்பட்ட தொற்றா நோய்கள் என மருத்துவ ரீதியாகப் பட்டியலிடப்படுகின்றன.

பொதுவாக மேலைத்தேய மருத்துவம் எனப்படும் ஆங்கில மருத்துவ நடைமுறையில் இதுவரை எட்டப்பட்ட மருத்துவ வளர்ச்சியினால் இவ்வாறான நோய்களை முற்றாக இல்லாது ஒழித்து மருந்துப்பாவனை தேவையற்ற நிலையை ஏற்படுத்த முடியவில்லை.

## நாட்பட்ட நோய்களுடன் நலமுடன் வாழ்தல்!

ஆனால் இந்நோய்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல், அவற்றின் பாதிப்புக்களை முற்கூட்டியே அறிதல், பாதிப்புகளை (Complications) தவிர்த்தல் ஆகியவற்றின் மூலம் நோய்களை முகாமித்து நோயாளியின் வாழ்க்கைத்தரத்தை இயன்றளவு சிறப்பாகப் பேண மேலைத்தேய மருத்துவம் முயல்கிறது. ஆக, இந்நோய்களிற்கான மருந்துப்பாவனை வாழ்நாள் முழுவதும் தேவைப்படக்கூடியது என்பதை நோயாளிகள் விளங்கிக்கொள்வது அவர்கள் தாமாக சிகிச்சை பின்பற்றுதலிருந்து விலகிக் கொள்வதை தவிர்ப்பதற்கு அவசியமானது.

மருத்துவக் கண்காணிப்பிலும், ஒழுங்கான மருந்துப்பாவனையிலும் இருக்கும் சில நோயாளிகள் தொடர்ச்சியாக தமக்கு "பிரசர், சுகர் நோமலாக இருந்தது. அதனால் கிளினிக் போகவில்லை என்று கூறுவதைக் கேட்டிருக்கிறோம்.

இது தவறானது. மருந்துப் பாவனையினாலேயே இந்நோய்கள் கட்டுப்பாட்டில் இருந்தன என்பதையும் நோயாளிகள்மனதில் கொள்ள வேண்டும். ஆகவே, கிரமான மருத்துவக் கண்காணிப்பு அவசியமானது. பரிசோதனைகளின் படி ஒருவருக்கு குருதியமுக்கம், குருதிக் குளுக்கோஸ் அளவு குறைவான நிலையில் காணப்படின் தேவைக்கேற்ப மருந்துகளைக் குறைப்பதும் அரிதாக சிலருக்கு குறித்த நோய்க்கான மருந்துகள் நிறுத்தப்படுவதும் மருத்துவ கண்காணிப்பிலேயே செய்யப்படும்.

கிரமமான மருத்துவ சிகிச்சை பின்பற்றுதல் (Regular Clinic Follow Up) ஏன் அவசியமானது?

- மேற்குறித்த நாள்பட்ட நோய்களின் தன்மை நோயாளியின் வயது மற்றும் அவரிற்கு இருக்கும் ஏனைய நோய் நிலைகளுடன் மாறுபடக்கூடியது.
- ஆகவே, நோய் கண்டறியப்பட்ட போது ஒருவருக்கு தேவைப்பட்ட மருந்து (Dose Adjustments) ஒவ்வொரு நோயாளிக்கும் தனித்துவமானது.
- மருந்துகள் ஒவ்வொன்றும் பக்க விளைவுகளைக் கொண்டிருக்கும். அவற்றின் பிரதான பயன் தரு விளைவுகளை விட பக்கவிளைவுகளின் தீவிரம் நோயாளியை பாதிக்கும் பொழுது அம்மருந்துகள் குறைக்கப்படவோ நிறுத்தப்படவோ வேண்டியதோடு அவற்றிற்கான மாற்று மருந்துகள் சேர்க்கப்படுதல் வேண்டும்.
- உயர் குருதியமுக்கம் (பிரசர்), நீரிழிவு (டயபற்றிஸ்), கொலஸ்ரோல் ஆகிய நாள்பட்ட நோய்கள் கட்டுப்பாட்டிற்குள் தொடர்ச்சியாகப் பேணப்படின் உயிராபத்தை விளைவிக்கும் தன்மையை நேரடியாகக் கொண்டிருப்பதில்லை. இவற்றின் கட்டுப்பாடின்மை மற்றும் நீண்ட காலத்திலான பாதிப்புக்களே (Complications) உயிராபத்தை உண்டு பண்ணுகின்றன. இப்பாதிப்புகளை தடுக்கவும் ஆரம்பத்திலேயே கண்டறியவும் கிரமமான மருத்துவ பின்பற்றல் அவசியமானது.
- நீரிழிவு, உயர்குருதியமுக்கம், முதலிய நோயுள்ளவர்களிற்கு ஆறுமாதம் அல்லது ஒருவருட காலப்பகுதிக்கு ஒரு முறை சிறுநீரகப்பரிசோதனை செய்யப்படுவது அவசியமானது. இது குருதிப்பரிசோதனை மூலமாகவோ அல்லது சிறுநீரில் புரதத்தின் அளவை பரிசோதிப்பதன் மூலமாகவோ ஆரம்பத்திலேயே கண்டறியப்படக் கூடியது. தேவைப்படின் "ஸ்கான்" (Ultrasound Scan) மற்றும் மேலதிக சோதனைகளை மருத்துவர்கள் ஒழுங்கு செய்வர். கட்டுப்பாடற்ற நீரிழிவு மற்றும் உயர் குருதியமுக்கத்தின் பாதகமான விளைவுகளில் ஒன்று சிறுநீரக செயலிழப்பு என்பதை நோயாளிகளின் மனதில் கொள்ளவேண்டும்.
- இதுதவிர, இருதயப்பரிசோதனை, கண்பரிசோதனை, நரம்புப்பரிசோதனை முதலியன கிரமமாக குறித்த கால இடைவெளியிலோ தேவைக்கேற்பவே செய்யப்படும்.

நோயாளிகள் செய்ய வேண்டியதும் தவிர்க்க வேண்டியதும்.



- அரச மருத்துவமனையிலோ, அல்லது தகுதிவாய்ந்த தனியார் மருத்துவ நிலையங்களிலோ, கிரமமான மருத்துவ பின்பற்றலில் இருத்தல் வேண்டும்.
- தமது நோய்கள் பற்றியும் அதற்கு தாம் பாவிக்கும் மருந்துப் பட்டியலையும் தமது வைத்தியரிடம் கேட்டு அறிவது நோயாளிகளின் உரிமை ஆகும்.
- மருத்துவமனைக்கு வர நேருகின்ற சந்தர்ப்பத்தில் தமது "கிளினிக்" பதிவு புத்தகத்தை கட்டாயமாக கொண்டு வருதல் வேண்டும்.
- மருத்துவ ஆலோசனைக் கேற்ப கேட்கப்படும் பரிசோதனைகளை கொடுக்கப்படும் திகதிகளில் சமூகம் தந்து மேற்கொள்ள வேண்டும்.
- அரச மருத்துவமனைகளில் சிகிச்சை பின்பற்றும் அனைத்து நீரிழிவு நோயாளிகளும் வருடத்தில் ஒருமுறை யாழ் போதனா வைத்தியசாலையின் கிளினிக் கட்டடத் தொகுதியின் முதலாம் மாடியில் அமைந்துள்ள "நீரிழிவு சிகிச்சை நிலையம்" (Diabetic Center) இல் சிறப்பாக பார்வையிடப்படுவதோடு, பரிசோதனைகள் மற்றும் சிபாரிசுகள் அடங்கிய அறிக்கை அவர்களிற்கு வழங்கப்படுகிறது. இது அவர்களின் மாதாந்த கிளினிக்கிற்கு மேலதிகமான ஒன்று என்பதோடு, வருடா வருடம் குறித்த திகதியில் பின்பற்றப்பட வேண்டியது.
- மருத்துவ ஆலோசனை இன்றி மருந்துக் கடைகளில் மருந்துகளை வாங்கிப் பாவிப்பது தவிர்க்கப்பட வேண்டும்.
- மருத்துவ ஆலோசனைகளுக்கேற்ப உணவு மற்றும் உடற்பயிற்சிகளை பின்பற்ற வேண்டும்.
- நோவுக்கு பாவிக்கப்படும் பல மருந்துகள். (Pain killers) சிறுநீரகபாதிப்பு, இரைப்பைபுண் முதலிய பல பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியன என்பதால் மருத்துவ ஆலோசனை இன்றி நோமருந்துகளை பாவித்தலாகாது.

கட்டுப்பாட்டுக்குள் நோய்களை வைத்திருத்தலும் குறைவற்ற செல்வமே!

சரியான மருத்துவ பின்பற்றலோடு உங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துங்கள்!

**வைத்திய கலாநிதி**
**அமரர்.வேல்.சாரங்கன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தம் தொடர்பில் கோட்டா வாய் திறக்க வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் சன்ன



(கொழும்பு)

13ஆவது திருத்தத்தை நடை முறைப்படுத்துவதற்கான ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் முயற்சிகள் குறித்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது மௌனத்தை கலைக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் சன்னஜெயசுமன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கான ஜனாதிபதியின் முயற்சிகளை மீண்டும் கடுமையாக கண்டித்துள்ள அவர் தேசத்தின் நலன்களிற்கு பாதகமான விதத்தில் விக்கிரமசிங்க ராஜபக்ச அரசாங்கம் செயற்பட முயல்வதால் கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ந்தும் அமைதியாக இருக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி இந்த விடயத்தில் தெளிவான நிலைப்பாட்டை எடுக்காவிட்டால் தற்போதைய நிகழ்ச்சி நிரலுக்கு அவர் மறைமுக ஆதரவு என்ற தவறான கருத்தைஅது ஏற்படுத்தலாம் என தெரிவித்துள்ள அவர் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் எவ்வாறு தனது மக்கள் ஆணையை தவறாக பயன்படுத்த அனுமதிக்க முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (4)

# மரை இறைச்சியுடன் ஒருவர் பொலிஸாரால் கைது

## இருவர் தப்பியோட்டம்

(கொழும்பு)

வண்ணாத்திவில்லு எலுவாங்குளம் இறால்மடு பிரதேசத்தில் மரை இறைச்சியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் இருவர் தப்பியோடியுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மரை இறைச்சியை சட்ட விரோதமாக கொண்டு செல்வதாக வண்ணாத்திவில்லு வனஜீவராசிகள் திணைக்கள வலைய உதவிப் பொறுப்பதிகாரி எம்.பி.எல்.எஸ் மாரசிங்ஹவிற்கு கிடைக்கெப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய நேற்று பிற்பகல் இறால்மடுவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஒருவர் இறைச்சியுடன் கைது செய்யப்பட்டதுடன் இருவர் தப்பியோடியதாக அவர் தெரிவித்தார்.

இதன்போது சுமார் 75 கிலோகிராம் மரை இறைச்சி கைப்பற்றப்பட்டதாகவும், இறைச்சியை வெட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு கத்திகள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியன கைப்பற்றப் பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (4)

# கிளிநொச்சியில் இராணுவ கெப் வாகனம் மீது தாக்குதல்

## மூவர் கைது

(கொழும்பு)

கிளிநொச்சி - ஆனைவிழுந்தான்குளம் பகுதியில் இராணுவ கெப் வாகனத்தை தாக்கிய மூன்று இளைஞர்களை அக்கராயன்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் படையினர் பயணித்த கெப் மீது மது போதையில் மோட்டார் சைக்கிளில் சென்ற சந்தேக நபர்கள் தாக்குதல் நட்த்தியுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. அத்துடன்ஆனைவிழுந்தான் குளம் இராணுவ முகாமின் கட்டளைத் தளபதி வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (4)

# மர்மமான முறையில் சிறுமி உயிரிழப்பு

(கொழும்பு)

சிலாபம் மேற்கு இரணவில சமிந்துகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வசித்து வந்த 9 வயது மாணவியின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை கயிற்றில் தொங்கிய நிலையில் இந்த சடலம் காணப்பட்டதாக சிலாபம் தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சலானி பீரிஸ் என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாணவியின் மரணம் சந்தேகத்திற்குரிய எனக் கருதி சிலாபம் தலைமையக பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சிறுமியின் தாயார் இரண்டு வருடங்களாக வெளிநாட்டில் பணிபுரிவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக சிலாபம் தலைமையக பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவத்தின் போது சிறுமியின் தந்தை தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த பூக்களுக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)

# விளையாட்டுப் பல்கலைக்கழகத்தை விரைவில் நிறுவ நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய விளையாட்டு சபை மூலம் விளையாட்டுத் துறையில் நிலவிய பல்வேறு பிரச்சினைகளுக்கு நடைமுறை ரீதியிலான தீர்வுகள் கிடைத்துள்ளதாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத் துறையில் தேர்ச்சியுடன் பட்டப்படிப்பை நிறைவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் உத்தேச விளையாட்டுப் பல்கலைக்கழகத்தை துரிதமாக ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதிரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கமைய நடவடிக்கைஎடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தியகமவில் உள்ள மகிந்த ராஜபக்ச விளையாட்டு வளாகத்தை அபிவிருத்தி செய்து, விளையாட்டுப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும், பாடசாலை மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் திறமையான விளையாட்டு வீர, வீராங்கனைகளை அடையாளங்கண்டு, அவர்களின் திறமைகளை மேம்படுத்தத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க, இளைஞர்கள் தொடர்பில் பாரிய எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் வைத்திருப்பதாகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (4)

# சிங்கராஜா வனப்பகுதியில் ஈரானியர்கள் மூவர் கைது

(கொழும்பு)

சிங்கராஜா வனப்பகுதியில் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பாகங்களை சேகரித்த ஈரானிய பிரஜைகள் மூவருக்கு உடுகம நீதிவான் நீதிமன்றம் ஒரு கோடியே முப்பத்து இரண்டு இலட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் தலா 44 இலட்சம் ரூபா அபராதம் விதித்து நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் வழங்கப்பட்ட தகவலுக்கமைய ஈரானிய பிரஜைகள் மூவரும் அண்மையில் சிங்கராஜா வனப்பகுதியில் தாவர மற்றும் விலங்குப் பாகங்களை சேகரித்துக் கொண்டிருந்த போது நெலுவ லங்காகம பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் நெலுவ வன அதிகாரிகள் குழுவினால் இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (4)

## புலம்பெயர் தொழிலாளர்களால்

# இவ்வருடம் இதுவரை 3 பில்.அமெரிக்க டொலர்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டில் இதுவரை வெளிநாட்டிலுள்ள இலங்கை தொழிலாளர்களிடமிருந்து இலங்கைக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பணம் அனுப்பப்பட்டுள்ளது.

ஜூலை மாதத்தில் மட்டும் 541 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

இது 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில் 261 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூலை வரையில் மொத்தம் 3,363.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார். (4)

# புத்தளத்தில் பாரிய தீப்பரவல் 250 ஏக்கர் நிலம் தீக்கிரை

(கொழும்பு)



புத்தளம் தப்போவ சரணாலயம் 12ஆம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் முதல் பரவிய தீயினால் சுமார் 250 ஏக்கர் நிலப்பரப்பு தீக்கிரையாகியுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அதிகாரி தினேந்திர ரனசிங்ஹ தெரிவித்தார்.

குறித்தப் பகுதியில் காட்டுத்தீ பரவியுள்ளதாக கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அப்பகுதி மக்கள் தகவலை வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினூடாக புத்தளம் நகரசபை தீயணைப்புப் பிரிவினருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

இதன்போது, புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்புரைக்கமைய புத்தளம் இராணுவப் பிரிவினர், புத்தளம் நகரசபை தீயணைப்புப் பிரிவினர் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து பாரிய சிரமத்திற்கு மத்தியில் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரலையில் பெண் ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை

## ஐரோப்பிய நாடொன்றில் சம்பவம்

(போஸ்னியா)

ஐரோப்பாவின் தென்கிழக்கு பகுதியில் உள்ள ஒரு நாடு போஸ்னியா-ஹேர்ச்கோவினா. இங்கு வசிப்பவர் நேர்மின் சுலெமனோவிக் (நேசஅமை ளூஉடநஅயழஎளைஉ). இவர் ஒரு உடற்பயிற்சியாளர். இவர் மீது போதை பொருள் கடத்தல் மற்றும் காவல்துறை அதிகாரியை தாக்கியது என பல வழக்குகள் உள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை சமூக வலைதளமான இன்ஸ்டாகிராமில் உள்ள தனது கணக்கில், நேர்மின் "இன்று ஒரு கொலையை நேரில் காண்பீர்கள்" என குறிப்பிட்டு ஒரு வீடியோ பதிவை நேரலை செய்ய தொடங்கினார்.

இதனை பார்த்த பலரும் அதிர்ச்சியடைந்து, அடுத்து என்ன நடக்குமோ என்பதை நேரலை வீடியோவில் பார்த்துக் கொண்டிருந்தனர். இவ்வாறு அனைவரும் பார்த்துக் கொண்டு இருக்கும் போதே அவர் ஒரு துப்பாக்கியை எடுத்தார். இத்துப்பாக்கியை ஒரு பெண்ணின் நெற்றி பகுதியில் வைத்து நேர்மின் சுட்டார்.

தகவலறிந்து பொலிஸார் அவரை தேடி அவர் இருக்குமிடத்தை கண்டறிந்து அவரை கைது செய்ய விரைந்தனர். அவர்களிடம் இருந்து நேர்மின் தப்பித்து ஓடினார். தப்பிக்கும் வழியில் மேலும் இருவரை கொன்றார். அதனையும் வீடியோவாக பதிவிட்டார். தான் பொலிஸாரிடம் சிக்காமல் ஓடி வரும் போது.

வழியில் இரு வரை சுட்டதாக அதனை வெளிப்படையாக கூறினார். கடைசியில் பொலிஸார் அவரை நெருங்கும் முன்பு நேர்மின் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு தற்கொலைக்கு முயன்றார். பொலிஸார் அவரை நெருங்கிய போது, அவர் உயிரிழந்துவிட்டார்.

அதில் 126 பேர் இந்த வீடியோவை "லைக்" செய்துள்ளனர்.

ஆனாலும், இந்த கொடூர சம்பவத்தை ஆதரித்து இன்ஸ்டாகிராமில் கருத்துக்கள் தெரிவித்தவர்கள் மீது வழக்கு பதிவு செய்ய, பொலிஸர் நடவடிக்கை எடுத்து வருகிறது. (4)

# நைஜீரியாவில் பள்ளிவாசல் இடிந்ததில் 7 பேர் பலி

(அபுஜா)

நைஜீரியாவின் கடுனா மாநிலத்திலுள்ள பள்ளிவாசலொன்றின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததில் 7 பேர் உயிரிழந்துள்ளதுடன் 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்தில் சிக்குண்டு உயிரிழந்தவர்களில் நால்வரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் எஞ்சிய சடலங்களை மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1980 ஆண்டு காலப்பகுதியில் கட்டப்பட்ட பள்ளிவாசலின் ஒரு பகுதியே இவ்வாறு இடிந்து விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# மியான்மரில் கனமழை 5 பேர் உயிரிழப்பு

## 40 ஆயிரம் பேர் வெளியேற்றம்



(நைபிடோ)

மியான்மரில் பருவமழை காரணமாக கனமழை பெய்து வருகிறது. இந்த கனமழைக்கு ஐந்து பேர் பலியான நிலையில், 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மியான்மரில் ஒவ்வொரு வருடமும் பருவமழை காலத்தில் அதிக மழை பெய்வது வழக்கமானதுதான். இருந்தாலும், தற்போதைய அதிதீவிர வானிலை நிகழ்வுகள் பருவநிலை மாற்றத்தால் மோசமடைந்து வருவதாக விஞ்ஞானிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

யங்கோனின் வடகிழக்கு பகுதியான பாகோவில் கனமழையால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் முன்னெச்சரிக்கை காரணமாக பலர் வெளியேறிய நிலையில், வெள்ளத்தின் அளவு அதிகரிக்க மீட்புப்படையினர் வீட்டில் இருந்த மக்களை பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றினர்.

இரண்டு மாடி கொண்ட கட்டடங்களில் முதல் தளம் வெள்ளத்தால் மூழ்கின. இதனால் மக்கள் மொட்டை மாடியில் தஞ்சம் அடையும் நிலை ஏற்பட்டது. சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அங்குள்ள மடங்களில் தஞ்சம் அடைந்தனர். (4)

# ஹவாய் தீவில் காட்டுத் தீ

## பலி எண்ணிக்கை 70 ஆக உயர்வு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஹவாய் தீவு அருகே உள்ள மவுய் தீவு பகுதியில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு காட்டுத்தீ ஏற்பட்டது. இந்த தீ நகருக்குள் பரவியதால் வீடுகள் மற்றும் கட்டடங்கள் சேதம் அடைந்தன. பலர் உயிருக்கு பயந்து கடலில் குதித்தனர்.

இந்த காட்டுத்தீயில் சிக்கி உயிர் இழந்தவர்கள் எண்ணிக்கை தற்போது 70 ஆக அதிகரித்து உள்ளது. பலர் படுகாயத்துடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். தீ ஓரளவு கட்டுக்குள் கொண்டு வரப்பட்டாலும் எங்கு பார்த்தாலும் புகை மண்டலமாக காட்சி அளிக்கிறது. தீ விபத்து ஏற்பட்டதும் பொது மக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடி விட்டனர். தற்போது தீ அணைக்கப்பட்டதால் பொது மக்கள் ஊருக்கு திரும்பினார்கள். அவர்கள் வீடுகள் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன. (4)

# சீனாவில் நிலச்சரிவில் சிக்கி 16 பேர் உயிரிழப்பு



(பீஜிங்)

சீனாவின் சியான் நகரில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 16 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன் மேலும் பலர் காணாமல் போயுள்ளதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காணாமல் போனவர்களைக் கண்டறியும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மோசமான வானிலை காரணமாக பல வீடுகள் மற்றும் கட்டடங்கள் சேதமடைந்துள்ளன என்றும் சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (4)

# சிரியா மீது துருக்கி வான்வெளி தாக்குதல் 12 கிளர்ச்சியாளர்கள் பலி

(சிரியா)

சிரியாவின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் குர்தீஷ் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

இவர்கள் சிரியாவில் இருந்தவாறு அவ்வப்போது துருக்கி மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். குர்தீஷ் ஆதரவு கிளர்ச்சியாளர்களை துருக்கி பயங்கரவாத அமைப்பை சேர்ந்தவர்கள் என கருதுகிறது.

துருக்கிக்கு இவர்கள் பெரும் தலைவலியாக இருந்து வருகிறார்கள். இதனால் இவர்களை ஒடுக்க துருக்கி பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு சிரியாவில் உள்ள கிளர்ச்சியாளர்களை குறிவைத்து துருக்கி பாதுகாப்பு படையினர் அதிரடி வான்வெளி தாக்குதல் நடத்தினார்கள்.



இந்த தாக்குதலில் குர்தீஷ் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் 12 பேர் இறந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். கிளர்ச்சியாளர்கள் வடக்கு சிரியாவில் தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருந்ததாகவும் இதை முறியடிக்கும் வகையில் அவர்கள் மீது வான்வெளி தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் துருக்கி பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக் கொள்ளும்.

– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உயிர்காக்கும் எங்கள் பண்பாட்டை மீள்நடுகை செய்வோம் வாரீர்...

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பாட்டுக் குரியவர்கள் நம் தமிழர்கள்.

அதனாலன்றோ தட்டிப் பறிக்கும் காக்கையையும் பாலைப் பொழியும் பசுவையும் நன்றி கொண்ட நாயையும் உயர்த்திப் பாடினான் பாரதி.

பாரதியின் கவித்துவம் என்பது அவன் தமிழனாகப் பிறந்ததனால் ஏற்பட்டதாகும்.

உண்மை தமிழ்ப்பண்பாடு என்பது உயிர் காக்கும் அறத்தை அடிப்படையாகக் கொண்டது.

ஆம், கன்று ஈன்ற பசுவுக்கு பச்சை அரிசி எடுத்து கஞ்சி காய்ச்சி பத்தியம் பார்க்கின்ற இனம் நம் தமிழினம்.

எனினும் இப்போது அறத்தை அழித்து மறத்தை வளர்க்கப் பாடுபடுகின்றோம்.

பணத்துக்காக மற்றவர்களைத் தாக்குகின்ற கயமைத்தனம் நம்மிடம் வந்துவிட்டது.

போதைக்கு அடிமையாகி குடும்பத்தின் கட்டமைப்பையே சீரழித்து விடுகின்ற அவலத்துக்கு நாம் ஆளாகிவிட்டோம்.

இந்தநிலையில் பிற உயிர் காக்கும் அறம் நம்மை விட்டு மெல்ல மெல்ல விலகிச் செல்கிறது.

ஒரு காலத்தில் வீட்டுக்கு வெளியில் – வீதிக்கருகில் தொட்டி கட்டி அதில் தண்ணீர் இறைத்து தெருக்களால் போகின்ற மாடுகள் தண்ணீர் அருந்துவதற்கு ஆவன செய்தோம்.

கூடவே தண்ணீர் குடித்த பசுக்கள் தங்கள் உடம்பை உரஞ்சுவதற்காக, ஆங்கே ஆ உரஞ்சிக்கல் நிறுத்தினோம்.

வீதியில் செல்கின்றவர்கள் களைப்பாற திண்ணை அமைத்த நாம் மண்பானையில் குடிநீர் வைத்து தாகம் தீர்த்தோம்.

இன்று இவையெல்லாம் முன்னைய காலத்தில் நடந்தவை எனக்கூறி, அதனை தொல்லியலாகப் பார்க்கின்ற பரிதாபம் ஏனென்று தெரியவில்லை.

அன்புக்குரியவர்களே! தர்மம் தமிழரின் பண்பாடு. பிறர்க்கு உதவுவதுதான் எங்கள் இல் வாழ்வின் இலக்கு.

அநீதியை எதிர்த்து நீதி கேட்பது எங்களின் வீரம். இவை பழையனவன்று. இங்கு புதியன புகுவதற்கு ஏது இடம்.

ஆகையால் அறத்தைக் காப்பாற்றுகின்ற எங்கள் பண்பாட்டை மீளவும் நிலைநிறுத்த வேண்டும்.

இப்போது நம் மண்ணில் ஏற்பட்டுள்ள வறட்சியால், நீரின்றி வாடுகின்ற உயிரினங்கள் ஏராளம். அதிலும் குறிப்பாக கால்நடைகள் குடிநீரின்றி அலைந்து திரிகின்றன.

அந்த ஜீவராசிகள் தண்ணீர் குடித்து தாகம் தீர்க்க பொது இடங்களில் தொட்டி கட்டி அதில் தண்ணீர் இறைப்போம்.

வீட்டின் வெளிவாசலில் தண்ணீர் வைத்து பசுக்களின் தாகம் தீர்ப்போம்.

இப்புண்ணிய காரியத்தில் இருந்து மீண்டும் உயிர் காக்கும் எங்கள் தமிழ்ப் பண்பாட்டை மீள்நடுகை செய்வோம் வாரீர்.

# ஊழல் அற்ற நாட்டில் மக்கள் வாழும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

ஊழல் அற்ற நாட்டில் மக்களுக்கு வாழும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். ஊழலுடன் தொடர்புடைய ஒருவரை நேரில் சந்திக்கும் பட்சத்தில் திருடர் என கூறும் அளவுக்கு நாட்டு மக்களுக்கு முதுகெலும்பு இருக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மாற்றத்தை விரும்பும் தலைவர்களை அடையாளம் காணுவோம் எனும் தொனிப்பொருளில் கொழும்பு,விஹாரமகாதேவி பூங்காவில் இடம்பெற்ற எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும்கூறுகையில், நாட்டு மக்கள் வழங்குவதை உண்டு வாயை மூடிக் கொண்டு இருக்க வேண்டும் என நினைக்கிறார்கள். 70 வீதமானவர்கள் - ஏழையாகவே இருக்கின்றனர்.

இவர்கள் கூறுவதைப் போன்று செயல்படும் பட்சத்தில் அரசியல்வாதிகளின் பின்னால் சென்று பிள்ளைகளை அரச பாடசாலைகளுக்கு அனுப்ப நேரிடும்.

தமக்கான தொழிலை பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்படும். எம்மை சுற்றியுள்ள பொலிஸாருக்கும், மக்களுக்கும் இது சகல விதத்திலும் பொருந்தும்.

முதலில்மக்களை தெளிவுபடுத்த வேண்டும். ஊழலுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளை புறக்கணிக்க வேண்டும்.

ஊழல் அற்ற நாட்டில் மக்களுக்கு வாழும் வாய்ப்பை ஸ்தாபிக்க வேண்டும். ஊழலைஒழிக்காமல்பொருளாதாரத்தை கட்டியெழுப்பி நாட்டை ஸ்திரப்படுத்த முடியும் என எவ்வாறு கூக்குரலிட்டாலும்பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது.

மேலும் பணவீக்கம் சரி எனவும் நாடு வழமைக்கு திரும்பியுள்ளதாகவும் அரசியல்வாதிகள் தற்போது காண்பிக்க முயற்சிக்கின்றனர்.

ஊழலை ஒழிக்காமல் நாட்டில் எவருக்கும் சுதந்திரமாக வாழ்வதற்க வாய்ப்பு கிடைக்காது. ஊழலுடன் தொடர்புடைய ஒருவரை நேரில் சந்திக்கும் பட்சத்தில் திருடர் என கூறும் அளவுக்கு நாட்டு மக்களுக்கு முதுகெலும்பு இருக்க வேண்டும். அவ்வாறு ஒன்று திரளுமாறு நாம் பொதுமக்களிடத்தில் கோரிக்கை விடுக்கிறோம்.

மேலும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த போராட்டத்தில் நான் பங்கு கொள்ளவில்லை.இதுஎனது தனிப்பட்ட போராட்டம்.

இந்த போராட்டத்தில் எந்த ஒரு கட்சியை சார்ந்த எந்த ஒரு நபருக்கும் கலந்து கொள்ள முடியும். இருப்பினும் அவர் மீது மக்களிடத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும்.

ஊழல், திருட்டு என்பவற்றை மேற்கொள்ளாதவராக இருக்க வேண்டும். குறிப்பிட்ட காலம் இதில் இருந்து விட்டு பிறகு மற்றொன்றுக்கு குதிக்கும் நபராக இருந்தால் எம்மால் அவ்வாறான தரப்பினரை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். (ம-7)

## இசை நிகழ்ச்சிகளுக்கான கட்டணங்கள் திருத்தம்

(கொழும்பு)

திரைப்படங்கள், மேடை நாடகம் மற்றும் இசை நிகழ்ச்சிகளை பொதுமக்களுக்கு காண்பிப்பதற்காக சட்டரீதியாக பெறப்பட வேண்டிய அனுமதிப்பத்திரங்களுக்கான கட்டணங்கள் திருத்தப்பட்டுள்ளன.

பொது அரங்காட்டல் சபை சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த திருத்தங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.அதன்படி, முன்னோட்டம் உள்ளடங்கலாக வெளிநாட்டு திரைப்படமொன்றை திரையிடுவதற்குரிய அனுமதிப் பத்திரத்துக்கான கட்டணம் 40 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், முன்னோட்டம் உள்ளடங்கலாக உள்நாட்டு திரைப்படம்ஒன்றை திரையிடுவதற்கான கட்டணம் 15 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், நீண்ட மேடை நாடகங்களுக்கு 1500 ரூபாவாகவும், குறுகிய மேடை நாடகங்களுக்கு 750 ரூபாவாகவும் அனுமதிக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

அவ்வாறே, உள்நாட்டு கலைஞர்கள் பங்குபற்றும் திறந்தவெளி இசை நிகழ்ச்சிக்கான அனுமதிப் பத்திர கட்டணம் 3 ஆயிரத்து 750 ரூபாவாகவும், வெளிநாட்டு கலைஞர்கள் பங்குபற்றும் திறந்தவெளி இசைக்கச்சேரிக்கான கட்டணம் 37 ஆயிரத்து 500 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ம-7)

## பற்றாக்குறை நிலவிய 14 மருந்துகள் இறக்குமதி

(கொழும்பு)

நாட்டில் பற்றாக்குறை நிலவிய 14 வகையான மருந்துகளை நாட்டிற்கு இறக்குமதி செய்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் நாட்டில் நிலவிய மருந்துப் பற்றாக்குறை 242 ஆக குறைவடைந்துள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்திய கடனுதவி திட்டத்தினூடாக நூற்றுக்கும் அதிக மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான முற்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடுத்த மாதத்திற்குள் இந்த மருந்துகள் நாட்டிற்கு கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## மருந்து ஒவ்வாமை மேலும் ஒருவர் மரணம்

மருந்து ஒவ்வாமை காரணமாக கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி காயத்திற்கு சிகிச்சை பெறுவதற்காக கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபரே இவ்வாறு உயிரிழந்தார்.வழங்கப்பட்ட நோய் எதிர்ப்பு மருந்தினால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக நோயாளி உயிரிழந்துள்ளதாக சுகாதார பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தின் பின்னர் குறித்த நோய் எதிர்ப்பு மருந்தின் பயன்பாடு தற்காலிகமாக இடை நிறுத்தப் பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.ஆய்வின்படி இதுவரை இரண்டு நோயாளிகளே ஒவ்வாமை காரணமாக உயிரிழந்துள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம-7)

## கனடா சிறார்கள் மீது பாலியல் துன்புறுத்தல்

(கொழும்பு)

இலங்கைக்கு சுற்றுலா வந்த கனடா நாட்டு சிறார்கள் இருவரை பாலியல் துன்புறுத்தல் செய்ததாக கூறப்படும் சுற்றுலா வழிகாட்டி ஒருவரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

16 வயதான சிறுமியும் சிறுவனும் அவர்களது தந்தையுடன் இலங்கைக்குச் சுற்றுலா வந்துள்ளனர்.

சுற்றுலாவின்போது, கொஸ்கொடையில் இருந்து காலி கோட்டையை பார்வையிடுவதற்காக வானில் பயணித்துள்ளனர்.

இதன்போது இரண்டு சிறுவர்களையும் சுற்றுலா வழிகாட்டி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ள சந்தேகநபரைத் தேடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முன்னாள் எம்.பி ஸ்ரீ ரங்கா வழக்கு

# சாட்சியங்களை மறைக்க முயன்ற பொலிஸ் பரிசோதகருக்கு சிறை

(வவுனியா)

2011 ஆம் ஆண்டு வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ ரங்கா செலுத்தி சென்ற ஜீப் வண்டி விபத்திற்கு உள்ளானதில் அதில் பயணித்த அமைச்சரவை பாதுகாப்பு பிரிவை சேர்ந்த பொலிஸ் அதிகாரி கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக தாக்கல் செயயப்பட்ட பீ அறிக்கை போலியானது என தெரிய வந்ததையடுத்து, வவுனியா மேல் நீதிமன்றில் தொடர்ந்து நடைபெற்று வரும் வழக்கில் சாட்சியங்களை மறைக்க முற்பட்ட பொலிஸ் பரிசோதகர் ரொசான் சஞ்சீவவிற்கு 7 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 24 மாத கால சிறைத்தண்டனை வழங்கி மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம். மிகாஸ் உத்தரவிட்டார்.

கொல்லப்பட்ட அதிகாரியே வாகனத்தை ஓட்டிச் சென்றதாக கூறி வவுனியா நீதிமன்றத்தில் பீ அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அப்போது செட்டிக்குளம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக இருந்த பொலிஸ் பரிசோதகர் ரொசான் சஞ்சீவ கையெழுத்தைப் போலியாக இட்டே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக விசாரணைகளில் கண்டறியப்பட்டது.

ஸ்ரீ ரங்கா ஓட்டிச் சென்ற லேண்ட் கிறசர் ரக ஜீப் வண்டியே மதவாச்சியில் இருந்து மன்னார் நோக்கி சென்ற பொழுது ஜீப் வண்டி வீதியை விட்டு விலகி, செட்டிக்குளம் வைத்தியசாலையின் மதில் சுவரில் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் ஸ்ரீ ரங்காவின் பாதுகாப்புக்காக இணைக்கப்பட்டிருந்த அமைச்சரவை பாதுகாப்பு பிரிவை சேர்ந்த உறுப்பினர் புஸ்பகுமார என்பவர் உயிரிழந்தார்.


எனினும் ஸ்ரீ ரங்காவிடம் விசாரணை நடத்திய போது தான் வாகனத்தை ஓட்டிச் செல்லவில்லை எனக் கூறியுள்ளார். ஸ்ரீ ரங்கா வாகனத்தை ஓட்டிச் சென்றமைக்காக முக்கிய சாட்சியங்கள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளன. இதனை தொடர்ந்து விசாரணைகளின் மூலம் கிடைத்த அனைத்து சாட்சியங்களும் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டு சட்டமா அதிபரின் ஆலோசனைகளின் படி உடனடியாக அடுத்த கட்ட விசாரணைகள் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து நீதிமன்ற விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில் வழக்கில் பொலிஸ் பரிசோதகர் ரொசான்சஞ்ஜீவ. ஸ்ரீ ரங்காவை காப்பாற்றுவதற்காக சாட்சியங்களை மறைக்க முற்பட்ட குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்பட்டன.

அத்துடன் சம்பவத்தில் கொல்லப்பட்ட அமைச்சரவை பாதுகாப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி புஸ்பகுமாரவின் மனைவிக்கு நட்ட ஈடாக ஐந்து இலட்சம் ரூபாய் வழங்க வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. (4-250)

### மக்காச் சோளத்தை இறக்குமதி செய்தால் டிசெம்பருக்குள் முட்டை விநியோகம்

#### கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம்



(கொழும்பு)

மக்காச்சோளத்தை இறக்குமதி செய்ய அனுமதித்தால் டிசெம்பர் மாதத்திற்குள் ஒரு முட்டையை 35 ரூபாவுக்கு வழங்க முடியும் என இலங்கை கால் நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கட்டுப்பாட்டு விலையை நீக்கும் நடவடிக்கையால் தற்போது முட்டை விற்பனை வலையமைப்பு வலுவடைந்து வருவதாக அதன் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோகிராம் உறைந்த கோழி இறைச்சியை 1,250 ரூபாவிற்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார். (4)

## கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18 தினங்கள் நடைபெறவுள்ளது.

மஞ்சம் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், கைலாசவாகனம் 26 ஆம் திகதி சனிக் கிழமையும், சப்பறம் 28 ஆம் திகதியும், தேர்திருவிழா 29 ஆம்திகதிசெவ்வாய்கிழமையும், தீர்த்தோற்சவம் 30 ஆம் திகதி புதன்கிழமையும், பூங்காவனம் 31 ஆம் திகதி வியாழக் கிழமையும்நடைபெறவுள்ளது. (4)

## மட்டக்களப்பில் சடலம் மீட்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பாலமீன் மடு ஆரம்ப வைத்தியசாலை வளாக பகுதியில் உள்ள பேருந்து தரிப்பிட கட்டடத்தில் ஆணொருவர் நேற்று சனிக் கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பேருந்துக் கட்டடத்தில் சம்பவ தினமான நேற்று பிற்பகல் 2 மணியளவில் ஆணொருவர் சடலமாக கிடப்பதை கண்டு அந்த பகுதி மக்கள் பொலிஸாருக்கு தெரிவித்தனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.குறித்த சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலைக்கு கொண்டு செல்வதற்கான நீதிமன்ற அனுமதியை பெறும் நடவடிக்கையை மேற்கொண்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (4)

# மன்னாரில் கடும் வரட்சி விவசாய செய்கை ஆபத்தில்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவி வரும் வரட்சியான காலநிலை காரணமாக மாவட்டத்தில் சிறுபோக செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் உட்பட கால்நடை வளர்ப்பாளர்களும் தோட்டச்செய்கையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆறு மாதங்களாக மழை இன்மையால் மன்னார் மாவட்டத்தில் நீர்நிலைகளில் நீரின் அளவு முழுமையாக குறைவடைந்துள்ளது. அதே நேரம் சிறிய குளங்கள், கால்வாய்கள் முற்றாக வரண்டு போய் உள்ளதை அவதானிக்க



கூடியதாக உள்ளது.

குறிப்பாக கடந்த மாதம் மன்னார் மாந்தை பகுதியில் சிறுபோக பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் நெற்செய்கையும் கருகியுள்ளதுடன் கத்தரி.கச்சான் போன்ற தோட்ட செய்கைகளும் முற்றாக பாதிப்படைந்துள்ளன.

அதேநேரம் கால் நடைகளும் விலங்குகளும் குடிநீர் இன்றி இறக்கும் சம்ப வங்களும் காணக்கூடியதாக உள்ளது. இன்னும் சில பகுதிகளில் வரட்சி காரணமாக கிணற்று நீரும் வற்றியுள்ள சம்பவங்களும் குறிப்பிடத்தக்கது. (4-285)


60 வது பிறந்த தின வாழ்த்து

திரு. கதிரவேற்பிள்ளை சௌந்தரராஜன்

Happy Birthday



KSR போட்டோ உரிமையாளரும் முறிகண்டி சிவயோக சுவாமிகள் ஆன்மீக அறக்கட்டளையின் ஸ்தாபகரும் தேசிய தமிழர் சக்தியின் கிளிநொச்சி பிராந்திய இணைப்பாளரும், வாழ்நாள் சமூக சேவகருமாகிய கதிரவேற்பிள்ளை சௌந்தராஜன் அவர்களை பல்லாண்டு காலம் நிறைவான வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம். (16697)

வாழ்த்துவோர்-

தேசிய தமிழர் சக்தி உறுப்பினர்கள் மற்றும் முறிகண்டி சிவயோக சுவாமி ஆன்மீக அறக்கட்டளையினர்.


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 350 |
| தக்காளி | 250 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 250 |
| கோவா | 200 | 280 | 250 |
| கரட் | 350 | 500 | 550 |
| பூசணி | 100 | 100 | 120 |
| புடோல் | 80 | 100 | 150 |
| வாழைக்காய் | 100 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 350 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 150 |
| பாகற்காய் | 450 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 60 | 250 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 200 | 200 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 |
| பீற்றூட் | 120 | 160 | 160 |
| கறிமிளகாய் | 350 | 350 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 200 |
| போஞ்சி | 450 | 420 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 50 | 100 |
| தேசிக்காய் | 400 | 250 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 350 |
| முள்ளங்கி | 80 | 100 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 50 |
| வல்லாரை | 50 | 30 | 60 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்.கல்வியங்...

பஸ்தரின் மனைவி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திருமணச் சடங்கிற்கு சென்றவேளை குடும்பஸ்தர் தனிமையில் வீட்டில் இருந்துள்ளார்.

இந்நிலையில் நேற்றுக் காலை உறவினரொருவர் இவர்களது வீட்டிற்கு சென்றபோது, குடும்பஸ்தர் சடலமாக காணப்பட்டதை அவதானித்து, சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்ததை தொடர்ந்து சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலத்தில் அடிகாயங்கள் காணப்படுவதுடன், சடலம் நிர்வாணமாகவும் காணப்படுவதால் குடும்பஸ்தர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்திற்கு நேரில் விஜயம் செய்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா மற்றும் சட்ட வைத்திய அதிகாரி மயூரன் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

## தவறிவிழுந்த...

பால்ராசா (வயது- 63) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் யாழ்ப்பாணம் அபூபக்கர் வீதியில் கடந்த வியாழக்கிழமை மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்து படுகாயமடைந்த நிலையில் திருநெல்வேலியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டுவரப்பட்டு மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,33,60,104)

## மோ.சைக்கிள்...

யாழ்ப்பாணம் வீதியில் தனது வீட்டுக்கு செல்வதற்காக இடது பக்கம் இருந்து வலது பக்கம் வீதியைக் கடக்க முற்பட்டபோது மோட்டார் சைக்கிள் ஒன்று அவரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் மோதியுள்ளது.

இதில் படுகாயமடைந்த குடும்பப் பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் நேற்று சனிக்கிழமை யாழ். போதனா வைத்திய சாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார்.(ம-7,33,60,104)

## ஐந்து நாள்...

தந்தையான நாராயணசாமி கோவர்த்தனன் (வயது-42) என்பவரே உயிரிழந்தவராவார்.

காய்ச்சல் காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சில மணி நேரத்தில் உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,33,60,104)

## சிறுமியை...

முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து நேற்று முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் வைத்து கள்ளப்பாட்டினை சேர்ந்த 26 வயதுடைய இளைஞனையும் குறித்த சிறுமியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன். குறித்த இளைஞனை தடுப்பு காவலில் வைத்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த மாதம் குறித்த இளைஞன் சிறுமியை திருமணம் செய்வதாக கூறி அழைத்து வந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

## ரணிலுடன்...

முன்மொழிவுகளையும் எதிர்காலத் திட்டங்களையும் பாராளுமன்றத்தில் முன்வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க [illegible] யுள்ளார். இந்த உரை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த உரை.

எனவே, அரச தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி முன்னெடுக்கவுள்ள சகல வேலைத்திட்டங்களுக்கும் தமிழ்க் கட்சிகள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டும். அப்போது தான் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வுகளை நாம் விரைந்து காண முடியும் எனத் தெரிவித்தார். (ம-7)

## இராவண...

குழப்பமான தகவல்கள் உள்ளன. இது தொடர்பில் ஆராய வேண்டுமென்றார்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதா கிருஸ்ணன். கருத்துத் தெரிவிக்கையில்,

இராவணன் இந்த நாட்டின் அரசன் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது. இராவணனை ஏற்றுக் கொண்டால் இராமனையும், சீதையையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இராமாயணத்தை ஏற்க வேண்டும். இராமாயணம் இலங்கைக்கு வருமானத்தை ஈட்டக்கூடியது. இராமாயணத்துடன் தொடர்புடைய இடங்களை பார்க்க இந்தியாவிலிருந்து பெருமளவானவர்கள் வருகிறார்கள்.

அயோத்தியில் கட்டப்படும் கோயிலுக்கு நுவரெலியாவிலுள்ள சீதையம்மன் கோயிலில் இருந்து கல் அனுப்பப்பட்டது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இராமாயணம் பாலமாக அமைந்தது என்றார்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கருத்துத் தெரிவிக்கையில்,

ஈழத்தில் தமிழனாக வாழ்ந்த இராவணேஸ்வரனே இராமாயணத்தின் முக்கிய கதாபாத்திரம். இலங்கையின் ஆதிக்குடிகளாகிய நாகர் என்ற தமிழரே இராவணன். தாயின் அந்திம கிரியைகளை செய்ய கன்னியா வெந்நீரூற்றை வெட்டினார். அங்கிருந்து பார்க்கும் போது 60 அடி நீளமான சமாதியுள்ளது. அது இராவணனுக்கும், தாய்க்கும் உரியது. இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தமிழர்கள் தோன்றி வளர்ந்த இடங்கள். பூநகரியின் கௌதாரி முனை 2700 ஆண்டுகளுக்கும் அதிகமாக தொடர்ந்து மக்கள் வாழ்ந்து வரும் இடம் இராவணன்பற்றிய ஆய்வை செய்யும்போது. இலங்கையின் பூர்வகுடிகள் தமிழர்கள் என்பது தெரியவரும் என்றார். (ம-7)


வேலையாட்கள் தேவை
அலுவலக கணனி இயக்குநர், சிட்டை எழுதுநர், ரிக்கட் விற்பனையாளர் ஆகிய பணிகளுக்கு 18-35 வயதிற்குட்பட்ட வேலையாட்கள் தேவை.
077 122 8841

நாகபூசணி அருளுடன்
விற்பனையாளர்கள் தேவை
யாழ்.நகரில் லொத்தர் சீட்டுக் கூடுகளுக்கும் நடமாடி விற்பனை செய்வதற்கும் விற்பனையாளர்கள் தேவை. முன் தொடர்பு கொள்பவர்கள் முன்னுரிமை அடிப்படையில் நியமிக்கப்படுவர்.
தொடர்புகளுக்கு:- 077 603 1723
அதிகரிக்கப்பட்ட பரிசுத் தொகைகளுடன் தேசிய லொத்தர் சபை, அபிவிருத்தி லொத்தர் சபை ரிக்கெட்டுக்கள் விற்பனையாகி வருகின்றன.
NLB: மகஜன சம்பத, கொவிசெத, மெகா பவர், தனநிதானய, ராசிசுபபலன், மற்றும் லக்கி செவின் என்பன
DLB: சனிக்கிழமை அதிர்ஷ்டம், ராசி அதிர்ஷ்டம், சுப்பர் போல், ஜயோதா, அதகோடிபதி, அபிவிருத்தி அதிர்ஷ்டம், மற்றும் சசிரி
அதிகம் வாங்குங்கள்; அதிகம் வெல்லுங்கள்
யாழ்.முகவர்கள் :- கனகலிங்கம், திலகவதி
இல.4, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(16698)

மெகா பவர்
திகதி 12/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1552
P 04 40 46 67 68
39453

தன நிதானய
திகதி - 2023.08.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1234
W 08 57 65 81 W
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
08737

லக்கி 7
திகதி 12.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0030
L7 இலக்கம் 0 1
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 3 7 2 2 9 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3446
சீட்டிழுப்பு திகதி 12.08.2023
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 07 41 43 45
B
39210

ஹந்தஹன
சீட்டிழுப்பு திகதி 2023.08.12
சீட்டிழுப்பு இலக்கம் 513
மிதுனம் 35 60 61 62 மிதுனம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/12
சீட்டிழுப்பு இலக்கம் 5204
Z 4 8 6 1 8 4

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2178
வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.12
தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 18 36 63 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,612,452.40
சுப்பர் போல் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 31 44 60 61 A

சனிதா
திகதி 2023.08.12 வெற்றி வாரம் 4339
03 27 34 72 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 54,036,252.00
சனிதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 28 51 65 66 R
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 3890
வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.12
தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 12 16 46 62
சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,583,428/-
ராசி அதிர்ஷ்டம் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 01 19 24 41

கப்ருக
திகதி 2023.08.12 வெற்றி வாரம் 1354 வர்ணம் சிவப்பு
A 38 38 62 64 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 427,400,144.20
கப்ருக "இரண்டாவது வாய்ப்பு" வெற்றி இலக்கங்கள் 06 11 12 60 P
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 619
திகதி 2023-08-12
வர்ணம் ஆரஞ்சு நிறம்
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 20 38 46
விதி எண் 01
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,123,520.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

අද කෝටිපති
அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2004
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.08.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,000,000/-
வெற்றி இலக்கங்கள் 27 28 63 68 Y
அத கோடிபதி "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 16 38 43 53 F


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

**IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH** *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(16505)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

# விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன், மணமகள் தேவையெனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

**0016 4765 71347** (கனடா)
**0014 3724 46737** (கனடா)
**077 240 9276** (தாயகம்)

# தையல் வேலைக்கு ஆட்கள் தேவை

கோப்பாயில் இயங்கி வரும் தையல் நிலையத்தில் பணியாற்ற பெண் பிள்ளைகள் தேவை. பழக விரும்புபவர்களும் இணைந்து கொள்ள முடியும்.

(C-7059)

**075 918 1095**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378**
**076 097 3127**

# Sejaya Micro Credit

**வடமாகாணத்தின் நுண்நிதியியல் துறையின் வேலைவாய்ப்புக்கள்**

கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் உயர்ந்தபட்சமான வெகுமதிகளுடன் வேலைவாய்ப்பு.

தகுதிகள் – A/L மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம்

கிளைகள் – முல்லைத்தீவு, மல்லாவி, முழங்காவில், சுன்னாகம், சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சி

தொடர்புகளுக்கு - **076 193 2441**

(16632)

உங்கள் சுயவிபரக்கோவை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி – தலைமை காரியாலயம் – nithashini@sejayacredit.com

# VILLAGE HOTEL JAFFNA EXPRESS

**யாழ் - கொழும்பு பஸ் சேவை**

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16349)

**T.P:077 544 8503**

# பாலாடுகள் விற்பனைக்கு உண்டு

நல்ல இன பாலாடுகள் குட்டிகளுடன் விற்பனைக்குண்டு
மாரிமுத்து செல்வரத்தினம்
மஞ்சத்தடி வீதி, கோண்டாவில் வடக்கு.

**021 221 3590**
**077 255 6691**

# கடைக் கட்டடம் வாடகைக்கு

**யாழ்.ஸ்ரான்லி வீதி, 65/21 (பழைய தபாற் கந்தோர் வீதி) கடைக்கட்டடம் வாடகைக்கு கொடுக்கப்படும்.**

தொடர்புகளுக்கு:
**076 315 6470**

# தேடல்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பெந்தர, ஹபுருகல (Benthara, Haburugala) பிரதேசத்தில் 1979,1980 களில் சேவையாற்றிய வைத்தியர் சின்னத்தம்பி தர்மலிங்கம் அவர்களை தொடர்புகொள்ள விரும்புகின்றோம்.அவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் கீழ் தரப்பட்டுள்ள தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளவும். அவரது உறவினர்கள் அவரைத் தொடர்புகொள்ள விரும்புகின்றனர்.

(16704)

**071 404 0640**
வைத்தியர் சஜிதரன்

# பற்சிகிச்சை

நிரந்தர பல்கட்டுதல் (implant). கிளிப் போடுதல் மற்றும் அனைத்து நவீன சிகிச்சைகளும்

**கம்சியா**

**பற்சிகிச்சைப் பிரிவில்**

(யாழ்.ஆஸ்பத்திரிக்கு முன்பாக. BOC வங்கிக்கு அருகில்) நடைபெறுகிறது.

**578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(C-7058)

**077 375 4490**
**077 220 2769**

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன் துறையில் (K.K.S) 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
துறைமுகத்தில் இருந்து 1.2 Km தூரத்தில்

தொடர்பு (16665)

**075 521 3533**

# விற்பனைக்கு

கந்தரோடையில் பிரதான வீதியில் உள்ள சகல வசதியும் கொண்ட கல்வீடு வளவு விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.

(16688)

**075 717 3924**

# வீடு வாடகைக்கு உண்டு

வெள்ளவத்தையில் 42 ஆவது வீதியில் No:3 இல் இரண்டு அறைகள், குசினி இணைந்த குளியலறைகளுடன் கூடிய தொடர் மாடி வீடு நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.

(16695)

**075 278 6033**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேதாக்கன்னி கந்தசாமி கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 14 இலட்சமும் 18 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்புகளுக்கு :-
**ஜெயம்**

(16703)

**077 814 7389**
**077 986 5457**

# காணி விற்பனைக்கு

நல்லூர் சங்கிலியன் வீதிக்கு அருகாமையில் இருக்கும் பண்டாரிக்குளம் வீதியில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை

(16691)

**077 214 0483**
**077 655 5395**

# விற்பனைக்கு

பாவித்த கூரை மரங்கள்,மர மாடிப்படி, ஜன்னல்கள், கன்வஸ் கதிரைகள் விற்பனைக்கு

(16662)


**077 993 5844**

# Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | |
|---|---|
| 1 Kg சீனி | - 235/= (max 2kg) |
| 1 Kg றவை | - 288/= |
| 1 Kg கோதுமை மா | - 189/= |
| 1 Kg Prima கோதுமை மா | - 199/= |
| 1 Kg அரிசி மா | - 169/= |
| 1 Kg தீட்டல் பச்சை | - 148/= |
| 1 Kg மல்லி | - 410/= |
| 10 Kg விஜிதா நாட்டு அரிசி | - 1820/= |
| 400 g அங்கர் பால்மா | - 1050/= ~~(1080/=)~~ |
| அங்கர் யோக்கட் | - 50/= ~~(80/=)~~ |
| 1 Kg Sunlight rose powder | - 360/= ~~(480/=)~~ |

1050/-




~~1080/-~~

(16701)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

**Happy Supermarket**
**0777 8080 30**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினரால் இல. 91, [illegible] மற்றும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.